
விலைசதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, வைகாசி 32 உ சனி (14-6-69) அவ்வல் 28 புத்தகம் 23 இதழ் 33




''சிங்கள மக்களே! ஒன்றுபடுங்கள்! பறைத் தமிழர்களை நாட்டைவிட்டுத் துரத்துங்கள்'—இது போன்ற தமிழர்களுக்கெதிரான கொலைகாரத்தன மான பல வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் கொழும்பிலும் தென்னிலங்கையிலும் ஆங்காங்கே காட்சியளிக்க ஆரம்பித்துள்ளன.

## சிங்கள இனவெறியின் விஸ்வரூபம்

# 'பறைத் தமிழனை துரத்து'

இதே நேரத்தில் தமிழ் மக்கள் மீது கோபாவேச வெறியுணர்ச்சியை கிளப்பிவிடக் கூடிய வகையில் விஷமத்தனமான பிரச்சாரங்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

மலையகத்தில் பல ஊர்களில் நான்கு தமிழர் அச்சமின்றி சேர்ந்து நடமாடக் கூட முடியாத பயங்கர நிலை தோன்றியுள்ளது. தமிழ் எழுத்துக்களுக்கு தார் பூசும் வேலையும் சுறுசுறுப்பாக நடந்து வருகின்றது. தமிழினத்தை சங்காரம் செய்வதற்கு இவைகள் முன்னோடி நடவடிக்கைகளாக இருக்கலாம் என நாட்டின் ஐக்கியத்திலும் சௌஜன்ய வாழ்விலும் அக்கறை கொண்டவர்கள் ஐயுறுகிறார்கள்.

தென்னிலங்கையில் கடந்த பல மாதங்களாக கட்டியெழுப்பப்பட்டு வரும் தமிழ் விரோத உணர்ச்சி இப்போது விஸ்வ ரூபமெடுத்திருக்கிறது.

● எம். ஜி. ஆர். படங்கள் தடைசெய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையுடன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப்பட எதிர்ப்பியக்கம் இன்று சகல தமிழ்ப் படங்களுமே தடைசெய்யப்பட வேண்டுமென்ற வெறிக் குரலாக வளர்ந்திருக்கிறது. இதற்கு ஆதரவாக தமிழ்ப் படம் திரையிடப்பட்டுள்ள படமாளிகைகளின் முன்பு எதிர்ப்பு இயக்கங்களும் வன்முறைச் செயல்களும் சிங்களப் பகுதியில் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்கு எதிராக போலீசார் இது வரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. தமிழ்ப் படங்கள் தடைசெய்யப்படுவதை திரு. தகநாயகாவும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த மற்றும் பலரும் ஆதரித்து கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

● நாம் தமிழர், தி. மு. க. இரண்டையும் தடைசெய்ய வேண்டுமென்றும், தென்னிந்திய அபாயத்திலிருந்து தமது நாட்டைக் காப்பாற்ற ஒவ்வொரு சிங்களவரும் துட்டகைமுனுவாக மாறவேண்டுமென்றும் பிரச்சாரம் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு ஆதரவாக சிங்களப் பகுதிகளிலுள்ள கிராமசபைகள், பட்டினசபைகள் நகரசபைகள் தீர்மானம் நிறைவேற்றி வருகின்றன.

(9ம் பக்கம் பார்க்க)

## போதனமொழி உரிமையை விலை பேசுவதற்கு முயற்சி?

இந்து பல்கலைக்கழகம் ஒன்று அமைப்பதற்கு அரசாங்கம் இணங்குமானால், வடபகுதியில் அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள பௌத்த தமிழ் பாடசாலைகளின் போதனமொழிப் பிரச்சினையில் கல்வியமைச்சின் விருப்பத்துக்கு குறுக்கே நிற்பதில்லையென தமிழ் காங்கிரசின் தலைமைப் பீடம் அந்தரங்கமாக முடிவு செய்துள்ளதாக தெரிய வருகிறது.

தமிழ் காங்கிரஸ் பிரமுகர் ஒருவரும், அமைச்சர் ஒருவரும் அண்மையில் உத்தியோகப்பற்றற்ற முறையில் சந்தித்தபோது, இவ்விஷயம் பேசப்பட்டதாகவும் அப்போது, இந்து பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு அரசாங்கம் இணங்க வேண்டுமென்றால் போதனமொழிப் பிரச்சினையில்—குறிப்பாக வடபகுதி பௌத்த தமிழ் பாடசாலைகளில் பெற்றோர்

(9ம் பக்கம் பார்க்க)

## நாவலர் முத்திரை

இம்மாத இறுதியில் நடைபெறும் நாவலர் சிலைத் திறப்பு விழாவையொட்டி கலாசார அமைச்சு நாவலர் உருவம் தாங்கிய விசேட முத்திரையொன்றை வெளியிட முடிவு செய்துள்ளது.

தமிழ்ப் பெரியார் ஒருவருக்கு இலங்கை அரசாங்கம் முத்திரை வெளியிட்டு சிறப்பிப்பது இதுவே முதற்றடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலர் முத்திரை வெளியிடப் படுவதற்கு தூண்டுகோலாக இருந்தவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. அவர்களே. திரு. இரத்தினத்துடன், நாவலர் சபையும் மற்றும் பல சபைகளும் விடுத்த கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்த்துள்ளது.

## முத்தையன் கட்டில் சிங்கள ஆக்கிரமிப்பு!

வவுனியாமாவட்டத்திலுள்ள முத்தையன்கட்டு விவசாயப்படை முகாமுக்கு 32 சிங்கள வாலிபர்களை அரசாங்கம் அனுப்பியுள்ளது. முத்தையன் கட்டு குடியேற்றத் திட்டத்திலும் மாத்தறை வாசியான சிங்களவர் ஒருவருக்கு காணி வழங்கப் பட்டுள்ளதாக அறியப் படுகிறது.

தமிழ்ப்பகுதியில் அமைக்கப்படும் விவசாயப்படை முகாம்களில் தமிழ் வாலிபர்களுக்கு மட்டுமே இடமளிக்கப்படும் என்று அரசாங்கம் ஏற்கெனவே அளித்திருந்த வாக்குறுதியை மீறி இப்போது 32 சிங்கள வாலிபர்களை முத்தையன்கட்டு விவசாயப்படை முகாமுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அதே சமயம், முத்தையன் கட்டு குடியேற்றத்தில் வவுனியா மாவட்ட மக்களுக்கும் அதன் பின்னர் யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கும் இடமளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தும், இவ்விரு மாவட்டங்களிலும் ஏராளமானோர் காணியற்றிருக்கும்போது, இவர்களுக்கு காணி கொடுக்கப்படாமல், மாத்தறைவாசியான சிங்களவர் ஒருவருக்கு அண்மையில் இங்கு காணி வழங்கப் பட்டிருக்கிறது.

இவ்விரு சம்பவங்களும் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சிங்களவர்களைத் தமிழ்ப் பகுதியில் திட்டமிட்டு குடியேற்றும் சூழ்ச்சியில் மீண்டும் ஆட்சியாளர் இறங்கி விட்டனரா என்று தமிழ் மக்கள் ஆத்திரத்துடன் கேட்கின்றனர்.

சிங்களப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விவசாயப் படை முகாம்களில் பலகாலிஸ்தானங்கள் நிரப்பப்படாமல் இருக்கும் அதே வேளையில் தமிழ்ப்பகுதி விவசாயப் படை முகாமுக்கு சிங்கள வாலிபர்களை அனுப்பிவைத்த செயல் அரசாங்கத்தின் திட்டமிட்ட சூழ்ச்சி என்று கருதப்படுகிறது.

முத்தையன் கட்டு விவசாயப்படையில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கு ஆதரவாக நான்கு சிங்கள வாலிபர்களுக்கு தமிழ் காங்கிரஸ் எம். பி. யொருவர் சிபார்சுக்கடிதங்கள் கொடுத்திருக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

சுதந்திரன் 14—6—69

# எங்கே நீ போனாலும் அங்கே உன்னோடு!

## அத்தியாயம் (22)

பூஜை வேளையில் கரடி புகுந்ததுபோல ஜெயநாதன் அங்கு நுழைந்ததைக் கண்ட இருவரும் அதிர்ச்சியுற்றனர். சுலபமாகத் தான் வந்த காரியம் முடியப் போவதை எண்ணி ரகுவுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலுங்கூட அச்சந்திப்புப் பிழையான சந்தர்ப்பத்தில் ஏற்பட்டதால் அவன் வருந்தினன். ஏற்கெனவே துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் உமாவுக்குத் தன்னல் இப்படியொரு நிலை உண்டாகியதை எண்ணத்தான் அவன் துன்பமும் அதிகரித்தது.

'என்ன உமா உன்ர காதலன் கடைசியில உன்னை அழைத்துப் போக வந்துவிட்டானு... பரவாயில்லையே...... இருந்தாலும் அவன் நல்லவன்தான்... உன்னை மறக்காமல் இத்தனை காலத்துக்குப் பின்னர் கூட உன்னை அழைத்துப் போக வந்துவிட்டானல்லவா... போ..ம் போ உமா உன் காதலனேடு நீ போ... கூறிவிட்டுக் குடிவெறியில் ஜெயநாதன் ஒரு பெண்ணைப் போலக் கதறியழுதபோது ரகுமட்டுமல்ல அவனுடன் இத்தனை வருடமும் பழகிய உமாவே திடுக்கிட்டாள். உலகப் பிரளயமொன்றே நடக்கப்போகிறதென எதிர்பார்த்த உமாவுக்கு அவன் செயலும் பேச்சும் புதுமையாக மட்டுமல்லாமல் ஆச்சரியமாகவும் இருந்தது.

'ச்...ச்சு...ச்... நீங்கள் இப்படி அழக்கூடாது. ஆண்பிள்ளைகள் அழுவது அழகல்ல. நீங்கள் என்னென்னவோ எல்லாம் வீணாகக் கற்பனை செய்து கொண்டு மனதை அலட்டிக் கொள்கிறீர்கள். இந்த சந்தர்ப்பத்தில ஒன்றைமட்டும் உங்களுக்குநான் சொல்லி வைக்க விரும்புகிறேன். அதாவது உமா உங்கள் மனைவியென்றே அவள் இங்குதான் இருக்கிறுள் என்றே சிலநிமிடங்களுக்கு முன்வரை எனக்குத் தெரியாது. நான் வந்த காரணமே வேறு. ஆயினும் ஒரு உண்மையை மட்டும் உங்களிடம் இருந்தும் நான் மறுக்கவோ மறைக்கவோ விரும்பவில்லை. உண்மை எப்போதுமே கசப்பானதுதான் என்றுலும் அந்தக் கசப்பினுற்கூட குணமுண்டென்ற ஒரேயொரு காரணத்திற்காக நான் அதை உங்களுக்குக்கூறி வைக்க விரும்புகிறேன்.

ஆமாம்! நீங்கள் கூறியது போல உமாவும் நானும் காதலித்தது என்னவோ உண்மைதான். உலகத்தில் இப்படி எத்தனையோ தவறுகளும் இதைவிடப் பாரதூரமான தவறுகளுங்கூட நடந்துவிடுகின்றன. அவற்றில் சில எப்படியோ உலகத்தின் கண்களுக்குப்புலப்பட்டுவிட இன்னும் சில இரண்டாம் பேருக்குத் தெரியாமலே மாண்டு மடிந்து விடுகின்றன. அதை அவரவர்கள் அதிர்ஷ்டம் என்று வேண்டுமானுலும் அழைக்கலாம் அல்லது விவேகம் என்று வேண்டுமானுலுங் கூறலாம். இந்த ஒரு தவறைவிட நாங்கள் இருவரும் வேறு எந்தக் குற்றமுஞ் செய்யவில்லை. உமாவுக்குத் திருமணமாகிவிட்டது என்பதை அறிந்த பின் நான் அவளை மறப்பதற்காக எவ்வளவோ முயற்சித்தேன். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு சில சந்தர்ப்பங்களை மறப்பது சிரமம். ஏன் மறக்க முடியாது என்றுகூடக் கூறலாம். நானும மறக்க முயற்சித்தேனே தவிர என்றுல் மறக்க முடியவில்லை. அதனுல் உமாவைப் பற்றிய நினைவு எழும்போதெல்லாம் அதை வலோத்காரமாக என் மனதைவிட்டு அகற்ற முயன்றேன்.

என் முயற்சிக்குச் சாதகமாக என் வாழ்க்கையிலும் ஒரு சில திருப்பங்கள் ஏற்பட்டன, அத்திருப்பங்களின் மூலம் சில புதிய உறவுகளை தேடிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கேற்பட்டது. அந்த உறவின் மூலம் எனக்குக் கிடைத்த உடன்பிறவாத தங்கையொருத்திக்கு வாழ்வுதேடி வந்தவன்தான் நான். வந்த இடத்தில எதிர்பாராத விதமாக உமாவையும் சந்திக்க நேர்ந்துவிட்டது. இவ்வளவுதான் நடந்தது. இதுதான் உண்மையுங் கூட என்று ஜெயநாதனை ஆசுவாசப்படுத்த முயன்றுன் ரகு.

குடிபோதையின் மத்தியிலும் ரகு கூறியவற்றையெல்லாம் இடைமறிக்காமல் அமைதியாகக் கேட்ட ஜெயநாதன் அகோரமாகச் சிரித்தான். சிரித்து ஓய்ந்ததும் ''நீ நல்ல கெட்டிக்காரன் இல்லையா... நல்லாக் கதையளக்கப் பழகியிருக்கிறுய் நான் பேயன்... குடிவெறியில் என்னுல் எதையும் புரிந்து கொள்ள முடியாது என்று நினைக்கிறுயாக்கும்......என்று சொல்லிவிட்டு அவன் மீண்டும் பலமாகச் சிரிக்க முற்பட்டபோது அது வாந்தியாகத்தான் வெளிவந்தது.

அதற்குமேல் எதைச் சொல்லியும் அவனைச் சமாதானப்படுத்த முடியாது என நினைத்த ரகு அன்று அவ்வளவோடு அந்த இடத்தை விட்டுப் போவதுதான் நல்லது என எண்ணியவனுய் திரும்பிச் செல்ல எத்தனித்த போது 'டேய்' என்று ஜெயநாதன் அவனைத் தடுத்து நிறுத்தினுன். ''நீ தனியாகப் போகாதே... உன் காதலியையும் அழைத்துக் கொண்டு போ... ம்... அவளையுங் கூட்டிச் செல்'' என்று சத்தம் போட்டபடி உமாவின் கையைப் பிடித்துக் 'கொற கொற' என இழுத்து அவன் அருகில் தள்ளிவிட்டான். அவன் தள்ளிய வேகத்தில் அவனது உடம்போடு உராசியபடி மோதுண்ட அவளை ரகு கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டான். பல வருடங்களுக்குப் பின் அவளைப் பற்றியதில் அவன் உணர்ச்சி சிலிர்த்தெழுந்தபோது அது அவன் உடலெங்கும் நடுக்கமாகப் பிரவாக மெடுத்தது.

அவன் பிடியினின்றுந் தன்னை விடுவித்துக் கொண்ட உமா எதுவுமே நடக்காதவள் போல் விலகிச் சென்று நின்றுள். என்னடி... அவனேடு போக விருப்பமில்லையா......? கள்ளமாகச் சந்தித்துப் பேச இருந்த துணிவு இப்போது எங்கே போய்விட்டது......? உன் காதலனைத் தேடி அவனிடம் உன்னை ஒப்படைப்பதற்காகத்தான் நானும் எவ்வளவோ முயற்சி எடுத்தேன். கடைசியில் இன்றுதான் என்னுல் அதைச செய்ய முடிந்தது. நீ அவனேடேயே போய்விடு!

தான் காதலித்த ஒருவன் முன்னிலையில் தன் கணவனலேயே அவமானப்படுத்தப் படுவது உமாவுக்கு துக்கமாகவும் வெட்கமாகவும் இருந்தது. திருமணமாகிய நாளிலிருந்தே அவள் கேட்டுக் கேட்டுப் புளிச்சுப் போன பேச்சுத்தான் என்றுலும் ரகுவின் முன்னிலையில் அது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

இவ்வளவு நாளுந்தான் பொறுத்தேன், இன்றுவது இரண்டொரு வார்த்தைகள் சுடசுடச் சொல்வோம் என எண்ணியவளாய் 'நீங்கள் கூறிவந்ததையும் எனக்கு இழைத்த அநீதிகளையும் இதுவரை மௌனமாகத்தான் பொறுத்தேன். ஆனுல் எதற்கும் ஒரு எல்லையுண்டு. மனி

நமது தொடர்கதை

தன் குடிக்கலாம் வெறிக்கலாம். ஆனுல் அதற்காக நிதானத்தை இழக்கக் கூடாது. ரகுவை நான் காதலித்தது உண்மை. எவரும் திருமணமாவதற்கு முன்பு இப்படியான பல தவறுகளை இழைக்கத்தான் செய்கிறுர்கள். நான் இழைத்த தவறையும் உங்களிடம் கூறி மன்னிப்புக் கேட்கத்தான் இருந்தேன். ஆனுல் திருமணமாகிய முதலிரவின போதே உங்கள் பேச்சைக் கேட்டபின் எனது விளக்கத்திற்கு அவசியமில்லை என்றுதான் இத்தனை நாளும் மௌனமாக இருந்தேன். ஆனுல் இப்போது எங்கள் இருவர் மீதும் நீங்கள் சுமத்திய அபாண்டமான பழியைப் பொறுக்க முடியாமற்தான் இத்தனை காலமாக மூடியிருந்த எனது வாயைத் திறக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

''ரகு கூறியது அத்தனையும் இறைவன் சாட்சியாக உண்மையானவைதாம். நீங்கள் கூறியபடி இவருடன் நான் செல்வதாக இருந்திருந்தால் இன்று நேற்றல்ல உங்களைத் திருமணஞ் செய்து கொள்வதற்கு முன்பாகவே சென்றிருப்பேன். உண்மையான களங்கமற்ற அன்புக்கு உடல் ஒரு பொருட்டல்ல என்பதை நான் அறிவேன்.

இறைவனது ரூபங்கூட எப்படியானது என்று அறியாமல் இறை பக்தி கொள்ளவில்லையா நாம்? அப்படி ஒரு காலங்கடந்த புனிதமான அன்பு என்ற நினைவோடு நான் ரகுவை மறந்தேன். உங்களைத் திருமணஞ் செய்து நான் பட்ட அடிக்கும் உதைக்கும் பின்னர்கூட ரகுவைப்பற்றி நான் நினைக்கவில்லை. நினைக்க விரும்பவுமில்லை. ஆனுல் நீங்கள் ஏதேதோ எல்லாம் வீணாகக் கற்பனை பண்ணிக் கொண்டு எல்லோரது நிம்மதியையுங் கெடுத்து விட்டீர்கள். அதிகம் எதற்கு.....? இன்று கூட ரகுவும் நானும் நினைத்திருந்தால் உங்களை அறியாமல் போயிருக்கலாம். ஆனுல்நாங்கள் எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்ற மனப்பான்மையுடையவர்கள் அல்ல. வாழ்க்கையிலும் சில ஒழுங்குகள் கட்டுப்பாடுகள் இருந்தாற்தான் வாழ்விலும் ஒரு மணம் வீசும் என்ற [illegible] வர்கள். அதனுல் என்னை... இல்லை... எங்களை மன்னித்து விடுங்கள்... என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து முடித்தாள்.

அவளது பேச்சைக் கேட்டு ரகு அப்படியே அதிர்ந்து போனுன். பணத்திற் புரண்டு துன்பம் என்பதே இன்னதென அறியாது வளர்ந்த ஒரு பெண்ணுடைய உள்ளரங்கமான வார்த்தைகளா இவை என்று தீர்மானிக்கச் சில நிமிடம் பிடித்தது அவனுக்கு. உலகில் உள்ள பெண்கள் எல்லோருமே இவ்வளவு உயர்ந்த கொள்கையோடு வாழ முடிந்தால் உலகத்தில் அநீதியே இருக்க முடியாது என எண்ணிப் பெருமைப்பட்டான். தன்னை மறந்த நிலையில் ரகு சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் 'பளார்' என யாரையோ அறையும் சத்தங் கேட்டுத் திரும்பினுன். அங்கே உமாவை ஜெயநாதன் பளார் பளார் என அறைந்து கொண்டிருந்தான்.

ஓடிச்சென்று ஜெயநாதனை தடுப்பதற்காக இரண்டடி எடுத்து வைத்தவனை 'வேண்டாம் ரகு...எனக்கு இது பழக்கமாய்விட்டது..'என்றுகூறிய உமாவைப் பார்த்துத் தன் கண்களில் சுரந்த நீரைத் துடைத்துக் கொண்டான்' தன் அசுரத்தனத்திற்கு ஒரு முடிவு ஏற்படும வரை அவளைக் கொன்றுவிடுவதுபோல அறைந்த ஜெயநாதன மீண்டும் அவளை ரகுவின் பக்கந் தள்ளிவிட்டு அவனுடன் போகும்படி வற்புறுத்திய போது அவனை எந்தவிதமாகவும் சாந்தப் படுத்த முடியாதென்பதை உணர்ந்த உமா ரகுவின் அருகில மிக நெருங்கி 'வாருங்கள் ரகு நாம் போகலாம்' என்று கூற அந்த துஷ்ட மனித மிருகத்திடம் இருந்து உமாவைக் காப்பதற்காக ரகு முன்னே நடந்து சென்ற அவளைப்பின் தொடர்ந்தான்.

சிறிது நேரம் இருவரும் தெருவில் இறங்கி எங்கோ மறைந்து நின்றுவிட்டு ஜெயநாதனின சத்தம் அடங்கிய பின் மெதுவாக வளவுக்குள் வந்து செடிமறைவில் நின்று வீட்டுகுள் அவதானித்துப் பார்த்த போது ஜெயநாதன் கோரமாகக் கொரட்டை விடுஞ் சத்தங் கேட்டது. அதன பின் இருவரும் வீட்டுக்குட் சென்று கதவுகளையெல்லாம் அடைத்து மூடிவிட்டு மின்சார விசையையும் அமுக்கிய போது அந்த வீடு திரும்பவும் இருள் வெள்ளத்தில் மிதந்தது. ஜெயநாதன் உறங்கிக் கொள்ளும் விதத்திலிருந்து இனி விடியும்வரை அவன் எழுந்து கொள்ள மாட்டான் என நிட்சயப் படுத்திக் கொண்ட ரகு உமாவை அறையைப் பூட்டிப்படுத்துக் கொள்ளும் படி கூறிவிட்டு தன் வீடு நோக்கிப் புறப்பட்டான்.

அவன் வீட்டு வாயிலை அடையும் போதே குழந்தை உமாவின் குரல் அவனைத் திகைக்கவைத்தது. அவன் அழுதுகொண்ட விதத்தில் இருந்து இந்த அழுகை நீண்ட நேரமாகத் தொடர்ந்து நடைபெற்றுள்ளது என்பது அவனுக்குப் புலனுகவே அவன் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குள் நுழைந்து கதவைப் பலமாகத் தட்டினுன், கையில் அழும் குழந்தையோடு கதவைத் திறந்த பவானி என்னண்ணு வந்துவிட்டீர்களா...? ஒருவேளை எங்காவது தங்கிவிட்டீர்களோ என்று யோசித்தேன்...ஆமாம்! படம் எப்படியண்ணு...நீங்கள் போன நேரந் தொடக்கம் இந்தப் பயல் என்னை என்ன பாடு படுத்திவிட்டான் என்று நினைக்கிறீர்கள்...? அப்பப்பா ஒரே அழுகை... மாமா... மாமா... என்று என் உயிரையே வாங்கிக் கொள்ளுகிறுன்... இனிமேலாவது இவனது அழுகை ஓய்கிறதா என்று பார்ப்பம்... இந்தாடா உன் மாமா வந்திட்டார்... என்று பேசிக் கொண்டே குழந்தையை அவனிடம் நீட்ட குழந்தை தாயைக் கண்ட பசுங்கன்று போல அவனிடம் விரைவாகத் தாவிக்கொண்டான்.

''என்ட ராஜிக் கண்ணு... நீ ஏண்ட அழுதாய்? உனனை விட்டுப்போட்டு நான் போவனுடா? ம்... அழாதடா... அழாத... ஒரு நீண்ட பெருமூச்சுடன் குழந்தை தன் அழுகையை நிறுத்திவிட்டு ரகுவின் கழுத்தைத் தன இரண்டு கைகளாலுங் கட்டிகொண்டு எக்காளமிட்டுச் சிரிக்கத் தொடங்கினுன். ''போக்கிரிப் பயல் இத்தனை நேரமா என்னை என்ன பாடு படுத்தினுன... ஆமாம்... நாளைக்கு இந்த மாமா திருமணஞ் செய்துகொண்டு போனப்புறம் இந்தச் சுட்டிப்பயல் என்ன செய்யப் போறுன்...? ஆமாம்! படம் எப்படியண்ணு... பிடிச்சுதா...? என்று பவானியே பேச்சைத் தொடர்ந்தாள்.

பதிலுக்கு ரகு சிரித்தான். படமாம்மா... ரொம்ப நல்லாயிருந்தது என் சீவியத்தில் இப்படி ஒரு படத்தை நான் இனிப் பார்க்கவே முடியாது. அவ்வளவு நவரசம் நிறைந்த படம். அதனுல் தான் நான் இரண்டாங் காட்சியையும் பார்த்திட்டுப் போகலாம் என்று நினைத்துச் சிறிது தாமதித்தன. இடையில இந்த சுட்டிப்பயலின நினைவு வந்ததும் நேரா ஓடி வந்திட்டன். நாளைக்கு வசதிப்பட்டா உன்னையும் இந்தப் பயலையும் நிட்சயமாகக் கொண்டுபோய்க் காட்டிறனம்மா... நீ பார்த்தால் ரொம்ப மகிழ்ச்சியடைவாய்.''

''போங்கண்ணு, இந்தப் பயல் எங்கண்ணு என்னைப் படம் பார்க்கவிடப் போறுன்? அதோட எனக்குக் கூடப் படம் பார்க்கணும் என்கிற ஆசை ஒரு துளி கூட இல்லை. எல்லாம் இவன் வளர்நத பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம்.''

அதற்குமேல் பேச்சை நீடிக்க விரும்பாத ரகு பவானியைச் சென்று தூங்கும்படி பணித்தான். அவள் எவ்வளவோ வேண்டியும் அவன் சாப்பிட மறுத்துவிட்டான். அவனுல் சாப்பிட முடியவில்லை. குழந்தை உமாவைத் தன் தோளில் போட்டு தட்டிக்கொடுத்தபடியே அவன் உலாவிக்கொண்டிருக்கையில் ''அண்ணு உங்களிடம் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன் உங்களைத் தேடி நிர்மலா வந்திச்சு. நம்ம டாக்

(8ம் பக்கம் பார்க்க)

பா. பாலேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கே. இராஜன்,
கொழும்பு-13.

கே: சினிமா செய்தி பொறுக்கியவர் இப்போது சுதந்திரன் ஆசிரியராக இருப்பதாக 'தெருப் பொறுக்கி' யொன்று கேலிசெய்திருக்கிறதே, பார்த்தீர்களா?

ப: பார்த்தேன். சினிமாவுக்கு வசனம் எழுதிய அறிஞர் அண்ணு தமிழ் நாட்டு முதலமைச்சராகவில்லையா? சினிமாக் கலைஞரான மு. கருணாநிதி இன்று தமிழக முதல்வராக விளங்கவில்லையா? சினிமா நடிகரான எம். ஜி. ராமச்சந்திரன் இன்று தி. மு. கழகத் தலைவர்களில் ஒருவராக விளங்கவில்லையா? இதெல்லாம் சினிமாச் செய்தி கூட எழுதத்தெரியாத அந்தப் 'தெருப் பொறுக்கிக்கு' எங்கே தெரியப் போகிறது?

கே: தமிழ்கசாப்புக்கடைக்காரன் மொழி போன்றது என்கிருன் என் நண்பன். இவனுக்கு என்ன கோளாறு வந்தது?

ப: உமது நண்பன் தமிழ் உலகம் படித்திருக்கலாம். அதனால் ஏற்பட்டதே இக் கோளாறு!

ஃ

மு. சுப்பிரமணியம்,
திருமலை.

கே: எங்கள் ஊரில் தொழிற்சாலையொன்றுக்கு விரைவில் மூடுவிழா நடத்த உத்தேசித்துள்ளோம். அதற்கு யாரை அழைக்கலாம்?

ப: 'தினபதி'யின் பிரதம ஆசிரியரே அந்த வேலைக்கு முற்றிலும் பொருத்தமானவர்; எனவே அவரையழையுங்கள்!

ஃ

ராசரத்தினம்,
அனுராதபுரம்.

கே: வி. நவரத்தினத்தின் நீண்ட அறிக்கையொன்றை 'தினகரன்' பத்திரிகை சில வாரங்களுக்கு முன் இரு இடங்களில் பிரசுரித்திருந்ததே!

ப: ஆமாம், தமிழரசுக் கட்சிக்கு எதிரான அறிக்கையானல், அது எத்தனை இடங்களிலும் பிரசுரிக்கும்!

கே: இளஞ்செழியன் என்பவர் யார்?

ப: ஊர் பேர் தெரியாத குப்பைகளைப்பற்றி எனக்கு தெரியாது. தினகரன் ஆசிரியரிடம் விசாரியுங்கள். அவர்தான் இப்படிப்பட்டதுகளின் பெயரால் அறிக்கை தயாரித்து அண்மைக் காலமாக வெளியிட்டுக் கொண்டுவருகிருர்.

கே: சைவத்தமிழர்கள் பௌத்தர்களாக திட்டமிட்டு மதமாற்றம் செய்யப்படுவதை வரவேற்றுப் பாராட்டியிருக்கிறதே தினகரன்?

ப: ஆமாம், தமிழர்களின் மொழியையும் மதத்தையும் மாற்றி அவர்களை சிங்கள பௌத்தர்களாக்கும் திட்டத்தை அமுல் நடத்துவதில் ஏரிக்கரை நிறுவனம் முன் நிற்கும்போது அங்கிருந்து வெளிவரும் தினகரன் அதைப் பாராட்டாமலிருக்கமுடியுமா? அதற்காகத்தானே கொழுத்த சம்பளம் கொடுத்து பல தமிழர்களை வேலைக்கு வைத்திருக்கிறது ஏரிக்கரை நிறுவனம்!

கே: தமிழரசுக்கட்சிக்கு எதிராக வெளியிடப்படும் அறிக்கைகள், தினசரிகளில் கொட்டை எழுத்துக்களில் அதிகப்படி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பிரசுரிக்கப் படுவதேன்?

ப: தமிழ் பேசும் மக்கள் கட்டுப்பாடாக ஒரே அணியின் கீழ் நிற்பதை உடைத்தெறிவதற்குத்தான்! தமிழரசுக்கட்சியை வீழ்த்திவிட்டால் அவர்களது இந்த இலட்சியம் நிறைவேறி விடுமல்லவா?

கே: ஏரிக்கரைப் பத்திரிகைகளுட்பட இந்நாட்டு 'தேசிய தினசரிகளின்' இன்றைய இலட்சியம் என்ன?

ப: தமிழரசுக்கட்சியைப் பலவீனப்படுத்தி அதன் மூலம் தமிழினத்தின் ஒன்றுபட்ட சக்தியை உடைப்பது தான். இந்த வேலையைப் 'பீக்கிங்' கம்யூனிஸ்ட் கட்சி செய்யுமானல், அக்கட்சியை ஆதரிக்கக் கூட 'சனநாயகம்' பேசும் இப்பத்திரிகைகள் இன்று தயாராக இருக்கின்றன!

ஃ

கே: இரத்தினம்,
கரவெட்டி.

கே: பௌத்தத்தை தழுவி சிங்களத்தை ஏற்பதற்கு சிறுபான்மைத் தமிழர்கள் முன் வந்தால் அவர்கள் நிலை எப்படியிருக்கும்?

ப: சிங்கள மக்களிடம் இலங்கைத் தமிழர்களிடமுள்ள சாதிகளைவிட அதிக அளவில் சாதி வேறுபாடு வேரூன்றியுள்ளது. ரொடியர்கள் எனப்படுவோர்தான் சிங்கள சமூகத்திலுள்ள குறைந்த சாதியென்றுகூறப்படுகிறது. இந்த ரொடியர்களுக்கும் கீழ்ப்பட்டவர்களாகவே மத இனம் மாறிவரும் தமிழர்களை சிங்களவர்கள் கருதுவார்கள்!

ஃ

ச. கந்தையா
மட்டுநகர்.

கே: சிங்களவர்களே உலகில் அதிக இரக்க முடையவர்கள் என்று நாரததேரோ என்ற பௌத்தபிக்கு கூறியிருக்கிருரே!

ப: ஆகா, அந்த 'இரக்கம்' நமக்கு தெரியாததா என்ன? சும்மா இருக்கும் தமிழ் சத்தியாக்கிரகிகளை மிருத்தனமாகத் தாக்குவதும் அப்பாவித் தமிழர்களை கட்டிவைத்தும் பெற்றோல் ஊற்றிக் கொளுத்துவதும் தான் சிங்கள மொழியில் இரக்கம் என்பதற்கு அர்த்தம் போலும்!

கே: சிங்களவர்களுடன் கலப்பு மணம் செய்யவும் தயாரென பௌத்த திராவிடப் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளாரே!

ப: முட்டாளைத் தவிர [illegible] மாட்டான். சிங்கள இனத்தில் பிறந்து சிங்கள மொழியை பேசும் கீழ் மட்டத்திலுள்ள சிங்களச் சாதியினருடனேயே கலப்புமணம் செய்ய முன்வராத சிங்கள உயர் சாதியினரா சிங்களவராக மாறும் தமிழர்களுடன் கலப்புமணம் செய்யப் போகிருர்கள்? சாதாரணமாக எல்லாத் தமிழர்களையுமே 'பறைத்தமிழர்' என்று இழிவாகத் சிங்கள வெறியர்கள் அழைப்பது இந்தப் பிரமுகருக்கு தெரியாதா?

ஃ

நா. வேந்தன்
ஏழாலை.

கே: அண்ணுவுக்கு அனுதாபத்தீர்மானம் கொண்டுவர முயற்சி எடுத்தாக புழுகுகிறதே 'பொன்னு' தான் ஒரு காளான் ஏடு?

ப: அண்ணுவுக்கு ஒரேமனமாக பாராளுமன்றத்தில் அனுதாபத் தீர்மானம் கொண்டுவந்தநிறைவேற்றுவதற்கு சிங்கள இனவெறியர்கள் இணங்கமாட்டார்கள் என்பது பொதுவாக எதிர்பார்க்கப்பட்ட விஷயம். பெப்ரவரி 5ந் திகதி மாலை பாராளுமன்றச் சிற்றுண்டிச் சாலையில் திருவாளர்கள் பொன்னம்பலம், மு. சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம், வி. என். நவரத்தினம் ஆகியோர் சந்தித்த போது அண்ணுவுக்கு அனுதாபப் பிரேரணை கொண்டு வந்தாலென்ன என்றபிரச்சினையை உடுவில் எம். பி. எழுப்பினுர், அப்போது 'சீச்சீ' சிங்கள ஆட்சியாரிடம் இதையெல்லாம் போய்க் கேட்டுக் கொண்டு நிற்கக்கூடாது' என்று எதிர்த்தவர் திரு. பொன்னம்பலம். ஆனல் அதன் பின்னர் 'தினபதி' விரித்த சூழ்ச்சிவலையில் சிக்கி, அண்ணுவுக்கு அனுதாபம் என்ற பிரச்சினையை எழுப்பி அரசியல் லாபம் தேட முயன்ற தமிழ் காங்கிரஸ் தலைவர், இறுதியில் அண்ணுவின் நற்பெயருக்கே அவமானம் ஏற்படுத்தி விட்டார். தினபதியும்தமிழ்காங்கிரசும்மறைந்தபேரறிஞரை இதன் மூலம் மறுபடியும் கொலை செய்த இத்துரோக சம்பவத்தை ஈழத் தமிழினம் ஒரு போதும் மன்னிக்காது!

ஃ

தமிழ்மாறன்,
அக்கரைப்பற்று.

கே: தமிழர்கள் சிங்களத்தைப் படிப்பதாலோ, அல்லது பௌத்த சமயத்தை தழுவுவதாலோ அதிக நன்மையடைந்துவிடமுடியுமா?

ப: சிங்கள பௌத்தர்களாக பிறந்தவர்களே பல இலட்சக்கணக்கானோர் இன்று நாட்டில் வேலையின்றியும் மற்றும் பல கஷ்டங்களாலும் அவதிப்படுகிருர்கள். நிலைமை இப்படி இருக்கும் போது புதிய சிங்கள பௌத்தர்களாக இன, மதம் மாறும் தமிழர்களுக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? இன அடிப்படையில் தமிழர்களுக்கு இன்று ஒதுக்கப்படும் அற்ப சொற்ப உத்தியோக தொழில்வாய்ப்புக்கள் கூட, தமிழர்கள் சிங்களவர்களாக மாறி விட்டால் கிடைக்காமற் போய் விடும்!

கே: தமிழ் பேசும் மக்கள் இலங்கையிற் சுதந்திரப் பிரஜைகளாக வாழ வழியென்ன?

ப: மொழி வழியமைய்ம் தமிழர் அரசு ஒன்றை நிலை நாட்டுதலே ஒரே வழி!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

# அகம்

—கவிஞர் சுரதா

சிப்பியின் வாய்தனில் வீழ்ந்தால்
துளிநீரும் முத்தாகும்;
சிவந்த பெண்ணே!
இப்படி வா என்றழைத்தார்.
இளந்தளிரைப் போல சைந்தே
எழுந்து சென்றேன்;

கைப்பிடித்தே எனையிழுத்தார்;
நானங்கே நாணத்தைக்
காட்டிநின்றேன்
தைப்பவளே! ஏன்தயக்கம்?
என்னுடலில் உன்னுடலைத்
தைப்பாய் என்ருர்.

ஆறுசுவை அமுதுண்ண
வாருங்கள் என்றழைத்தேன்,
அவரோ பெண்ணே!
வேறு சுவை வழங்கென்று
வேடு கட்டும் மேடுகளை
விரும்பிப் பார்த்தார்.


மீறி வரும் உணர்ச்சிகளை
அடக்குங்கள் எனக்கூறி
விலகி நின்றேன்.
தாறுபாடாச் செவ்வாழை
போன்றிருக்கும் என்னையவர்
தழுவலானுர்!

ஊட்டிவரை உறவென்னும்
படம்பார்க்கச் சென்றிருந்தோம்
ஒருநாள்; காதல்
பாட்டுவரும் கட்டத்தில்
என்னையவர் உணர்ச்சியொடு
பார்த்தார்! கூந்தல்

சாட்டையினல் நானவரை
மெதுவாக அடித்திட்டேன்;
தங்கத் தேரே!
வாட்டுவதும் உனக்கழகோ
இப்போதே வீட்டுக்கு
வா வா என்ருர்!

அண்ணு சொற்பயிற்சி மன்றம்
330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
★ பேச்சாளராக விரும்புபவர்கள் உறுப்பினராகலாம். ஆண், பெண் அனைவரும் சேரலாம்.
நிபந்தனைகளுக்கு எழுதுக.
பொறுப்பாளர்: புதுமைலோலன்
விரைவில் வகுப்புகள் ஆரம்பமாகும்.

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'
போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்
ராஜ பீடியை
வாங்குங்கள்
ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஊர்காவற்றுத் தொகுதிக்கு கிடைத்துள்ள 'ஒளி விளக்கு'

ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு அடுத்த தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பாக பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் போட்டியிடுவாரென தமிழரசுக் கட்சி அதிகாரபூர்வமாக கடந்தவாரம் அறிவித்து விட்டது. தீவுப்பகுதி தமிழரசு மாவட்டக் கிளையினரும் இதை மனப்பூர்வமாக வரவேற்றுள்ளனர். கட்சியின் நியமனக்குழுவும் மாவட்டக் கிளையினரும் எடுத்துள்ள இம் முடிவை நாமும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

இப்போதைய ஊர்காவற்றுறை பா. உ. வான திரு. வி. நவரத்தினம், தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி கட்சியின் கண்ணியத்தை காற்றில் பறக்கவிட்டு தனது கடமையிலிருந்து வழுவியதனாலேயே அவரை கட்சிப் பொதுக்குழு ஏகமனதாக கட்சியிலிருந்து நீக்கிவைத்தது. திரு. நவரத்தினம், கட்சியின் கட்டுப்பாட்டை மீறி நடந்து, தமிழரசுக் கட்சிக்கும் தமிழினத்துக்கும் அவமானம் தேடித் தந்தது மட்டுமல்ல; தமது செய்கை மூலம் ஊர்காவற்றுறைத் தொகுதியில் அவருக்கு வாக்களித்த தமிழ் பெருங்குடி மக்களுக்கும் மீளாத கறையை ஏற்படுத்தி வைத்துள்ளார்.

ஊர்காவற்றுறை தொகுதி மக்கள் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளிலும், சித்தாந்தங்களிலும் ஊறி வளர்ந்தவர்கள். கட்சியின் தலைவர்கள்மேல் குலையாத நம்பிக்கையும் குன்றாதவிசுவாசமும் கொண்டவர்கள். தனி மனிதரை அவர்கள் என்றுமே மதிப்பது கிடையாது. கட்சியையே பெரிதென மதிக்கும் உண்மையான சனநாயக மரபிலிருந்து சிறிதும் வழுவாதவர்கள் என்பதை 1956 ம் ஆண்டுக்குப்பின் நடைபெற்ற ஒவ்வொரு பொதுத் தேர்தல்களும் நிரூபித்து கொண்டே வருகின்றன.

தமிழரசுத் தந்தை செல்வா காட்டும் ஒப்புயர்வற்ற சமஷ்டி அரசியல்வழியே இந்நாட்டுத் தமிழினம் மேன்மையுறவுள்ள ஒரே ஒரு நல்ல—பாதுகாப்பான வழியென்பதை அவர்கள் உணர்ந்து வைத்திருக்கிறார்கள். இதனால் தான், தமிழரசுக்கட்சியின் கோட்டை என்று கூறப்படும் தொகுதிகளில் தீவுத் தொகுதி முதலிடம் வகித்துவருகிறது.

கடந்த தேர்தலின் போதும் இத்தொகுதி மக்கள் தமிழரசுக் கட்சியையும் சமஷ்டி இலட்சியத்தையுமே மனதார ஏற்று அதற்கு வாக்களித்தார்களே தவிர நவரத்தினம் என்ற தனிப்பட்ட மனிதருக்கல்ல என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமில்லை.

திரு. நவரத்தினம் தமிழரசுக் கட்சியின் முதுகில் குத்தியதோடன்றி சமஷ்டி இலட்சியத்தையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு, இன்று தமிழரசுக் கட்சியை ஒழித்துக்கட்ட நினைக்கும் ஜன்மப் பகைவர்களின் கையாளாகக் காரியம்பார்த்து வருவதைக் கண்டு அவரைப் பிரதிநிதியாக்கிய தீவுத் தொகுதியைச் சேர்ந்த இன உணர்ச்சியும் கட்சிப்பாசமும் கொண்ட தமிழ் மக்களின் உள்ளங்களெல்லாம் குமுறிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை;

திரு. நவரத்தினம் கட்சிக்குத் துரோகம் புரிந்ததோடன்றி, தீவுத் தொகுதி மக்களிடம் இப்படிப்பட்ட துரோகம் புரிவதற்கு முன்கூட்டி அனுமதி பெற்றதுமில்லை. தமது தொகுதி மக்களிடம் திரு. நவரத்தினம் சென்று தமிழரசுக் கட்சிக்கு துரோகம் புரிவதற்கு அனுமதி கேட்டிருப்பாரேயானால், அங்குள்ள தாய்குலமே சிறியெழுந்து அதை எதிர்த்து தடுத்து நிறுத்தியிருக்கும்.

தொகுதி மக்களின் கருத்தினைக் கேளாமல், தொகுதி மக்கள் இட்ட கட்டளையை மீறி—அவர்களை மதிக்க மறுத்த திரு. நவரத்தினத்தைக் கூட மன்னித்து மீண்டும் கட்சியில் சேர்ப்பதற்கு தீவுத் தொகுதி மாவட்டக் கிளையும் அதன் தலைவர் ச. அருமைநாதரும் படாத பாடுபட்டிருக்கிறார்கள். அதற்கும் திரு. நவரத்தினம் செவிசாய்க்க மறுத்து விட்டதுடன், மாவட்டக்கிளையினரையும் அவமதித்து விட்டாரென்றே கூற வேண்டும்.

திரு. நவரத்தினம் அரசியலில் நேர்மை, கண்ணியம் உடையவராக இருந்தால், எந்தக் கட்சி சார்பில் மக்கள் தமக்கு வாக்களித்தார்களோ அந்தக் கட்சியின் கட்டுப்பாட்டை மீறவும் எந்தச் சமஷ்டி கொள்கைக்கு மக்கள் வாக்களித்தார்களோ அந்தச் சமஷ்டிக் கொள்கையை மீறி தனித் தமிழ் நாட்டு பிரசாரத்தில் இறங்கவும் துணியுமுன்னர் தாம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உதறி எறிந்திருக்கவேண்டும். ஆனால் அப்படி செய்வதற்கு அவரிடம் அரசியலில் ஒழுக்கமல்லவா இருக்கவேண்டும்?

1962 ம் ஆண்டு தமிழரசுக்கட்சியின் மன்னார் மாநாட்டின் போது தமிழரசுக் கட்சி மலையகத்தில் தொழிற் சங்கம் அமைப்பதை எதிர்த்து பகிரங்கமாக அறிக்கை விட்டு விட்டு கட்சியிலிருந்து ஒதுங்கியிருந்த திரு. நவரத்தினம், பின்னர் ஊர்காவற்றுறை பிரதிநிதியாக அப்போதிருந்த திரு. வீ. ஏ. கந்தையா மறைந்த சமயம் பார்த்து கட்சிக்குள் மீண்டும் தலை காட்டியதன் நோக்கம் என்ன வென்பதை தீவுப்பகுதி மக்கள் இப்போது தெளிவாக உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

இன்று திரு. நவரத்தினம் தமிழரசுக் கட்சியை அழித்து விடத்துடிக்கும் எதிரிகளின் கையாளாக மாறிவிட்டார். தமிழ்ப் பகுதியில் இருக்கும் அரசியல் எதிரியான திரு. பொன்னம்பலத்தை ஏற்றிப் போற்றுவதுடன் மட்டுமன்றி, தமிழரசுக் கட்சி மீது பழி சுமத்தி பிரதமரைப் பாதுகாக்க மளவுக்கு பொய்யும் பித்தலாட்டமும் கலந்த நச்சு அறிக்கைகள் வெளியிட்டு வருகிறார்.

# பொன்னம்பலத்தின் கோழைத்தனம்

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அரசியலில் ஓர் கோழையென்பது தமிழ் மக்கள் அனைவரும் ஏற்கெனவே அறிந்து கொண்ட ஓர் விடயம். போதனு மொழிப் பிரச்சினையில் திரு. பொன்னம்பலம் அண்மையில் விடுத்த அறிக்கை இதை மேலும் ஊர்ஜிதப்படுத்திவிட்டது. அதே நேரத்தில் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், போதனு மொழிப் பிரச்சினைமீது தெரிவித்த கருத்து அவரது அஞ்சாநெஞ்சத்தையும்கொள்கையுறுதியையும் தமிழர்களின் வீரத்தையும், சிங்களவர்களுக்கும் உலகுக்கும் நன்கு உணர்த்தியிருக்கும்.

''போதனுமொழிப்பிரச்சினை தமிழ் பேசும் மக்களின் பிறப்புரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினை. தமிழன் தமிழைப் படித்துத் தமிழனக வாழ்வதா அன்றிச் சிங்களத்தைப் படித்துச் சிங்களவனக மாறுவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் தமிழர்களே தவிரச் சிங்களவர்களல்ல எனவே சிங்கள மக்களே! விலகி நில்லுங்கள். எமக்கு எது வேண்டும் என்பதைச் சொல்வதற்கு உங்களுக்கு அதிகாரம் இடையாது. எமக்குக் கட்டளையிட நீங்கள் யார்?''

இவ்வாறு சிங்கள வெறியரை நோக்கி வீரம்கொப்புளிக்க உரிமை வேட்கையுடன் திரு. செல்வநாயகம் ஆணித்தரமாகக் கூறியிருந்ததைப் படித்து தமிழர்களின் சோர்வுணர்ச்சி பறந்தது. கூனனும் நிமிர்ந்து உட்கார்ந்தான். தள்ளாத வயதிலும் செல்வா காட்டிய உறுதி பலரை வாயடைக்க வைத்து விட்டது.

ஆனால், பரிதாபம்! 1947-ம் ஆண்டு, தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று குரலெழுப்பிய தமிழ் காங்கிரஸ் தலைவர், கூனிக்குறுகி ஏதோ பிச்சை கேட்பவரைப்போல, 'சிங்கள மக்களே, தயவுசெய்துகொஞ்சம் கருணை காட்டுங்கள். போதனு மொழிப் பிரச்சினையில் உங்கள் நல்லெண்ணமே (Sympathy) எமக்குத்தேவை'யென்ற சாரப்பட ஐந்தாக வளைந்து பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்திருந்தார். இதைப் படித்த இலங்கை தமிழர்களும், உலகத் தமிழர்களும் வெட்கத்தாலும் அவமானத்தாலும் கூனிக் குறுகிப் போயிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

சிங்களவர்களுக்குக் கோபம் வந்துவிட்டாலும் என்ற பயத்தில் கூனிக் குறுகிப் பிறப்புரிமையைக் கூடப் பிச்சைபோல கெஞ்சிக் கேட்டு, 'இரந்து வாழும்' வழி தமிழ் காங்கிரசின் வழி! தமிழரசுக் கட்சியின் வழியோ, தமிழனின் வீர மரபுகளுக்குக் களங்கம் ஏற்படுத்தாமல், தமிழனின்பிறப்புரிமையை நிமிர்ந்து நின்று கேட்கும் தன்மான வழி. இந்த இரண்டு வழிகளிலும் தமிழரசுக்கட்சி காட்டும் வழியைத் தன்மான உணர்ச்சியுள்ள ஈழத் தமிழினம் பின் பற்றும் என்பதும் கோழைகளை அரசியலிலிருந்து துரத்தி அடித்துவிடும் என்பதும் உறுதி.

★

திரு. பொன்னம்பலம் ஓர் அரசியல் சந்தர்ப்பவாதி என்பதை எடுத்துக் காட்டும் மற்றோர் சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது. இந்து விவகார ஆலோசனைச் சபையின் தலைவராகப் பழுத்த இந்துவும், அமரர் வன்னிய சிங்கத்தின் சகோதரரும் சுகாதார அமைச்சின் நிரந்தரச் செயலாளருமான திரு. கு. பாலசிங்கம் நியமனம் செய்யப்படுவதை எதிர்த்திருக்கிறார் திரு. பொன்னம்பலம். இந்து விவகார ஆலோசனைச் சபையின் தலைவரை அச்சபையின் உறுப்பினர்களேகூடி தெரிவு செய்ய வேண்டுமென்றும் அமைச்சர் நியமனம் செய்வது தவறென்றும் ஆட்சேபித்திருக்கிறார் ஜீ. ஜீ.

ஆகா, திரு. பொன்னம்பலத்தின் 'ஜனநாயக' உள்ளத்தின் தன்மைதான் என்னே! அன்று மாவட்ட சபை மசோதாபற்றி விவாதிக்கப்பட்ட நேரத்தில், மாவட்டசபைகளின் தலைவரை அந்தந்த மாவட்ட சபைகளே தேர்ந்தெடுக்க விடவேண்டும் என்ற தமிழரசுக்கட்சியின கோரிக்கையை எதிர்த்து மாவட்ட சபைத் தலைவராக அரசாங்க அதிபரே வரவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றவர் இதே பொன்னம்பலம்தான் என்பதை மக்கள் அதற்குள் மறந்து விடவில்லை. அன்று இந்த 'சனநாயக' எண்ணம் திரு. பொன்னம்பலத்துக்கு எங்கே போய் விட்டது?

உண்மையில் அன்று மாவட்டசபைகள் வரவிடாமற் தடுப்பதற்காக 'குழப்பியடித்த' பொன்னம்பலம், இன்று திரு. சி. பாலசிங்கத்தின் நியமனத்துக்கு எதிராக கச்சை கட்டுவதற்கு காரணம், உண்மையில் அவருக்கிருக்கும் சனநாயக உந்தலா அல்லது, கோப்பாய்க் கோமான் அமரர் வன்னிய சிங்கத்தின் சொந்தச் சகோதரர் ஒருவர் இந்து ஆலோசனைச் சபைத் தலைவர் பீடத்தில் அமரவிருக்கிறார் என்பதனாலேற்பட்ட காழ்ப்புப் புணர்ச்சியா என்பதை மக்

(9 ம் பக்கம் பார்க்க)

கட்சி மீதும் தலைவர்கள் மீதும் இத்தனை காழ்ப்புணர்ச்சியைக் கொட்டுபவர், கட்சிக்குள்ளிருந்த போது அரசியல் எதிரிகளுடன் சேர்ந்து எத்தனை கீழறுப்பு வேலைகளை செய்திருப்பாரோ என்று எண்ணிப் பார்க்கும் போது திரு. நவரத்தினம் இத்துடனாவது கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டது தமிழினம் செய்த தவப்பயன் என்று கூற வேண்டும்.

பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் எடுக்க தமிழரசுக் கட்சி அனுமதித்தது தவறு; இரியகொல்லையின் சூழ்ச்சிக்குள் கட்சி விழுந்து விட்டது; என்று இறுதியாக ஒரு 'பெரிய உண்மையைக் கண்டு பிடித்து விட்டது' போல திரு. நவரத்தினம் கூறியிருக்கிறார்.

பௌத்த பாடசாலைகள் பொறுப்பேற்கப்படுவதை கட்சி எதிர்த்து நேரடி நடவடிக்கையில் குதித்திருந்தால், தமிழினத்தவர்களிடையே மோதல் ஏற்பட்டிருக்கும்; அதைக் காரணமாகக் காட்டி சாதிவெறி தமிழ் இனத்தில் உடைப்பையும் கசப்பையும் மேலும் வளர்ந்திருக்கும். தமிழினத்தின் ஒற்றுமை மேலும் சிதறக்கூடாதென்று கருதியே இனத்தின் உயிர் பிரச்சினையான போதனு மொழிப்பிரச்சினையை மட்டும் கட்சி எழுப்பியது.

தமிழரசுக் கட்சியை அழிப்பதன் மூலம் தமிழினத்தை அழித்தொழிக்க விரும்பும் சக்திகளின் கையாளாக இன்று மாறி விட்ட திரு. நவரத்தினம் தமிழரசுக் கட்சியினதும் தமிழினத்தினதும் அழிவுக்கு வழி காட்டுவாரே தவிர வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வழி காட்டுவாரென்று எப்படித்தான் எதிர்பார்க்க முடியும்?

ஆகவே ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களைப் பொறுத்தவரை அடுத்த தேர்தல் அவர்கள் கட்சி மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கும், இலட்சிய வெறிக்கும் ஒரு சவாலாக அமையப் போகிறதென்பதில் சிறிதும் ஐயமில்லை.

1965 ம் ஆண்டுத் தேர்தலில் கட்சிக்கு விரோதமாக செயற்பட்ட திரு. பாலசுந்தரத்துக்கும் திரு. சிவசுந்தரத்துக்கும் முறையே கோப்பாய், கிளி நொச்சி, வாக்காளர்கள் அளித்தபாடம் ஊர்காவற்றுறை மக்கள் உள்ளமெலாம் நிறைந்திருக்கும் என்று நம்புகிறோம். அந்தப்பாடத்தை விட இன்னும் இறுக்கமான பாடத்தை மக்களை மதிக்காது கட்சியின் முதுகில் குத்திய துரோகிகளுக்கு காவலூர் மக்கள் கற்பிப்பார்கள் என்பதில் நமக்கு கிஞ்சிற்றும் சந்தேகம் கிடையாது.

ஊர்காவற்றுறை மக்கள் தமது இலட்சிய விளக்காகப் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தைப் பயன்படுத்தி திரு. நவரத்தினத்தால் தொகுதிக்கு ஏற்பட்டுள்ளகளங்கத்தைத் துடைத்தெறிவார்கள் என்று நம்புகிறோம்.

## தமிழ்ப்பட பகிஷ்கரிப்பு பிரசாரம்!

நூரளை மாவட்டத்தில் வாழும் மக்களை தமிழ்ப் படங்களைப்பகிஷ்கரிக்கும்படி கோரும் இயக்கமொன்றை தீவிரமாக முன்னின்றுநடத்த ஏக்சத் சிங்கள பெரமுனை எனும் இயக்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

இந்த இயக்கத்தை நாடெங்கும் விஸ்தரிக்கவும் இவ்வியக்கம் நடவடிக்கையெடுத்து வருகிறதாம். தி. மு. க. வை எதிர்க்கும்படி இவ்வியக்கம் சிங்களமக்களை கோருமாம். இதற்காக கதிர்காமத்தில் 'அறம் பாடவும்' இவ்வியக்கம் ஒழுங்குசெய்து வருவதாக தெரிகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் போட்டியிட ஜீ. ஜீ. அச்சம்!

# அருளம்பலத்துக்கு 'அள்ளி வைக்க' சூழ்ச்சி!

அடுத்த பொதுத்தேர்தலில் நல்லூர்த் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக அதன் தலைவர் திரு. பொன்னம்பலம் போட்டியிடுவது பெரும்பாலும் உறுதியாகி விட்டதென்பதை அண்மையில் கந்தர்மடம் தமிழ் காங்கிரஸ் கிளைத் திறப்புவிழாவில் நடைபெற்ற அமளிதுமளிகள் ஊர்ஜிதப்படுத்துவதாக இருக்கின்றன.

இக்கூட்டத்தில், நல்லூர்த் தொகுதிக்கு தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக திரு. சி. அருளம்பலமே மீண்டும் போட்டியிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்த யாழ். மாநகரசபை ஒருவர் உடனே அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். இதையடுத்து திரு. சி. அருளம்பலமும் கூட்டத்திலிருந்து வெளியேறி விட்டதாகவும் கூட்டம் கூச்சல், குழப்பத்துடன் முடிந்ததாகவும் தெரிகிறது.

திரு. நெல்வேலி வடக்கில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டமொன்றில் கலந்துகொண்ட பொன்னம்பலம் கிராமசபைத் தலைவர் ஒருவரின் உரையைக் கேட்டுக் கொதிப்படைந்து 'நொன் சென்ஸ்' என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறி விட்டாராம்.

தமிழ் காங்கிரஸ் கட்சிக்குள் அடுத்த பொதுத் தேர்தலுக்கு வேட்பாளர்களை நியமிப்பதில் 'பிச்சுப்பிடுங்கல்கள்' அதிகரித்து வருகிறது. சாவகச்சேரியில், முன்பு போட்டியிட்ட திரு. சிவானந்தன் எதுவரினும் 'அடுப்படி முன்னனி' யாருக்கு விட்டுக்கொடுக்க முடியாதென்றும் தமிழ் காங்கிரஸ் சார்பில் தம்மை நிறுத்தாவிட்டாலும், தாம் போட்டியிடப் போவதாகவும் அறிவித்து விட்டாராம். உடுவில் தொகுதிக்கு தம்மை 'மதிக்காத' திரு. சிவனேசனை நிறுத்தப் போவதில்லையென தமிழ் காங்கிரஸ் தலைவர் கூறிவிட்டாராம். அதை தொடர்ந்து தமிழ் ஆசிரியர் ஒருவர் அத்தொகுதியில் காங்கிரசில் போட்டியிட அங்கலாய்ப்புக் கொண்டுள்ளாராம். ஆனால் அங்கு திரு. பொன்னம்பலத்தின் மகன் போட்டியிடப் போவதாக வெளிவந்த செய்திகளால் அந்தஆசிரியர் மனமுடைந்து இருக்கிறாராம்.

இதே சமயத்தில் நல்லூர்த் தொகுதி மிகவும் சிக்கலுக்குள்ளாகியுள்ளது. நல்லூர்த் தொகுதியில் தாமே போட்டியிடும் ஆசை, தமிழ் காங்கிரஸ் தலைவருக்கு ஆழமாக வேரோடியிருக்கும் வேளையில், திரு. சி. அருளம்பலம் தம்மையே நிறுத்த வேண்டுமென ஒற்றைக்காலில் நிற்கிறாராம்.

டாக்கிடையே திரு. அருளம்பலமும் அங்கிருந்து வெளியேறினாராம்.

ஐயாயிரம் புதிய வாக்காளரைச் சேர்த்து அவர்களிடமிருந்து ஆளுக்கு ருபா இரண்டு வீதம் ருபா பத்தாயிரம் உறுப்புரிமைப் வர் ஒருவருக்கு, சி. அருளம்பலத்தைக் கட்சி சார்பில் வேட்பாளராக நியமிக்கும்படி சில ஆதரவாளர்கள் கடிதம் எழுதியிருப்பதாகவும இங்கு கூறப்பட்டபோது திரு. பொன்னம்பலம் அதிக கவலையடைந்து காணப்பட்டாராம்.

நாகராஜா, துரைராஜாக்களை நல்லூரில் நிறுத்தினால் கந்தர் மடம் காங்கிரஸ் கிளை வன்மையாக எதிர்க்கும் என்று கூட்டத்திலிருந்து வெளியேறிய ஒருவர் கூக்குரலிட்டார். இவர் ஒரு இ. போ. ச. ஊழியர் என்று தெரிய வருகிறது.

கூட்டத்தில் நடைபெற்ற சம்பவங்களையும் திரு. பொன்னம்பலத்தின் பேச்சையும் கவனித்தவர்கள், நல்லூர்த் தொகுதியிலேயே திரு. பொன்னம்பலம் போட்டியிடப்போ வது நிச்சயமானதென்றென தெரிவித்தனர். திரு. அருளம்பலத்தை எப்படியும் காலை வாரிவிட்டு விட்டு, திரு. பொன்னம்பலமே போட்டியிடுவாரென ஊகிக்கப்படுகிறது.

## கந்தர்மடம் கூட்டத்தில் கலாட்டா!

## எம். எம். சி. வெளியேற்றப்பட்டார்!!

அண்மையில் கந்தர் மடம் தமிழ் காங்கிரஸ் கிளை திறப்புவிழாவில் இந்தப் பிரச்சினை அமளிதுமளிப்பட்டது. இக்கூடத்தில் பேசிய மாநகர சபை உறுப்பினர் ஒருவர், சி. அருளம்பலமே நல்லூருக்கு நிறுத்தப்படவேண்டும் என வலியுறுத்தினர். இப்படி வலியுறுத்திய குறித்த உறுப்பினர் உடனே கூட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டாராம். இதைத் தொடர்ந்து கூட்டத்தில் கூச்சல் எழத் தொடங்கியது. இந்தக்கலாட்டாக்கிடையே... பணமாகக் கட்டினால் மட்டுமே திரு. சி. அருளம்பலத்தை மறுபடியும் நல்லூரில் நிறுத்துவதுபற்றி கட்சியோசனை செய்யும் என்று திரு. பொன்னம்பலம் கூறினாராம்.

திரு. பொன்னம்பலத்தின் நிபந்தனை கேட்ட அருளம்பலத்தின் ஆதரவாளர்கள் சிலர் அப்படியானால் சுதந்திரக் கட்சி வேட்பாளராக திரு. அருளம்பலம் போட்டியிடலாமென்று யோசனை கூறினாராம். தமிழரசுத் தலைமை வகித்த நல்லூர் கிராமச்சங்கத் தலைவரின் வரவேற்புரையை சகிக்க மாட்டாமல் 'நொான் சென்ஸ்' என்று கூறி விட்டு உடனே அங்கிருந்து வெளியேறி விட்டாரென்று அறியப்படுகிறது. ஆனால் கூட்டத்தில் திரு. பொ. சுகவீனமாகப் போய்விட்டதாக சாட்டு கூறப்பட்டபோது கூடியிருந்த மக்கள் சீட்டியடித்தும் கரவொலியெழுப்பியும் கேலி செய்தனராம்.

இக் கூட்டத்தில் வரவேற்புரை நிகழ்த்திய நல்லூர் கி. ச. தலைவர், ''நாம் நல்ல தலைவர்களில்லாது கஷ்டப்படுகிறோம். தற்போதைய தலைவர்கள் ஒருவரும் சரியில்லை. வோட்டு கேட்க வருகிறார்கள். தேர்தல் முடிந்ததும் போய்விடுவார்கள். இங்கு வந்திருக்கும் தலைவரிடம் ஒரு தொழிற்சாலையைத் திறந்து வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை கொடுக்க பணமில்லையா? மக்களே! திரு. செல்வநாயகம் வந்தாலும் அவரிடமும் இப்படியே கேளுங்கள்'' என்றாராம்:

### 'நொான்சென்ஸ்'

திருநெல்வேலியில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்கு சென்ற திரு. பொன்னம்பலம், கூட்டத்துக்கு

இதைக்கேட்டுச் சகித்துக் கொள்ள மாட்டாமல், 'வட் நொான் சென்ஸ்' என்று முணுமுணுத்துக் கொண்டு திரு. பொன்னம்பலம் உடனே வெளியேறிவிட்டாராம்.

# இரத்தினத்துக்கு தீவுப்பகுதி மக்கள் வரவேற்பு!

ஊர்காவற்றுறைத் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் சார்பாக அடுத்த பொதுத் தேர்தலில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் போட்டியிடுவது குறித்து தொகுதி மக்களிடையே மகத்தான வரவேற்பும் மகிழ்ச்சியும் காணப்படுகிறது.

திரு. இரத்தினம் போட்டியிடும் செய்தி இம்மாதம் 6ந் திகதி வேலணையில் நடைபெற்ற தொகுதிப் பிரமுகர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட போது கூடியிருந்தவர்கள் அகமும் முகமும் மலர அதை வரவேற்றனர்.

மக்கள் பணியே மகேசன் பணியென 24 மணிநேரமும் பொதுநலப்பணியாற்றுவதொன்றையே குறிக்கோளாக கொண்ட திரு. இரத்தினம் அவர்களின் சேவை மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள தீவுப்பகுதி மக்களுக்கு கிடைக்க விருப்பது ஓர் வரப்பிரசாதம் என்று கூட்டத்தில் பலர் கருத்து தெரிவித்தனர்.

அடுத்த பொதுத் தேர்தல் குறித்து தீவுப்பகுதியில் எழுந்துள்ள நிலைமைகளை ஆராய்வதற்கும், திரு. இரத்தினம் வேட்பாளராக நிறுத்தப்படுவதையிட்டு தொகுதிப் பிரமுகர்களின் கருத்தினை அறியவும், தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை மாவட்டக் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இக் கூட்டம், [illegible]லுள்ள பண்டிதர் இரத்தினத்தின் இல்லத்தில் இம் மாதம் 6ம் திகதி நடைபெற்றது. கூட்டத்துக்கு நாரந்தனை கி. ச. தலைவரும் தமிழரசுக்கிளைத் தலைவருமான திரு. ச. அருணைநாதர் தலைமை வகித்தார்.



கள் கூட இக்கூட்டத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது.

இக்கூட்டத்தில் பேசிய திரு. அமிர்தலிங்கம் கூட்டத்தின் நோக்கத்தையும், கிளிநொச்சித் தொகுதி மக்களின் பூரண சம்மதத்தோடு, அடுத்த தேர்தலில் தமிழரசுக்கட்சி ஊர்காவற்றுறைக்கு திரு. இரத்தினத்தை நிறுத்த முடிவு செய்துள்ளதையும் எடுத்து விளக்கினர்.

### முதுகில் குத்தினார்

தீவுப்பகுதி மாவட்டகிளைச் செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு பேசும் போது கூறியதாவது:—

''திரு. வி. நவரத்தினம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி வாக்களிக்க முடிவு செய்த போது தீவுப்பகுதி மக்களையோ, மாவட்டக் கிளையையோ சிறிதும் கலந்து ஆலோசிக்காமல் நடந்து கொண்டார். பின்னர் வந்து, கம் கொடுப்பதில்லை; அவற்றில் பங்கு பெறுவதில்லை; பிரச்சினைக்குரிய அடையாள அட்டை மசோதாவை கட்சி பொதுக்குழு ஆராய்ந்த நேரத்தில் எல்லாம் அங்கு வந்து திரு. நவரத்தினம் தனது கருத்தை தெரிவித்திருக்கலாம்; ஆனால் அவர் வரவில்லை. மாறாக கட்சியின் முதுகில் குத்தினார்.

''இதுதவிர தொகுதியைப் பொறுத்த வரையிற்கூட

## 'தீவுப்பகுதி தமிழரசுக் கோட்டை; அது உடைபட அனுமதியோம்'

—திருநாவுக்கரசு

தீவுப்பகுதியின் சகலஇடங்களிலிருந்தும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், கி. ச. 'கி. மு. ச.' மாதர் முன்னணி உறுப்பினர்கள், சமாதான நீதவான்கள், முன்னாள் கிராமத்தலைவர்கள், திரு. இரத்தினத்தின் ஆதரவாளர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட [illegible] கலந்து கொண்டனர். தமிழரசுக்கட்சியுடன் இது நாள்வரை ஒத்துழைக்காத பல பிரமுகர்

உங்களைக்கேளாமலே முடிவு செய்துவிட்டேன், என்னைக் காப்பாற்றுங்கள் என்ற பாணியில் மக்களைக் கேட்டார், இப்படி மக்களை மதிக்காதவர்களை மக்கள் தங்கள் தலைவர்களாக மதிக்கமாட்டார்கள்.

''திரு. நவரத்தினம் கட்சியின் செயற் குழுக்கூட்டங்களுக்கோ பொதுக் குழுவுக்கோ பெரும்பாலும் சமு

திரு. நவரத்தினம் எதுவித சேவையும் புரிந்ததாக யாரும் கூறமாட்டார்கள். அப்படியிருந்தும்தமிழ்இனத்தின் ஒற்றுமை கருதி திரு. நவரத்தினம் மீண்டும் கட்சியில் வந்து சேருவதற்கு சந்தர்ப்பம் அளித்தோம். அதையும் அவர்தட்டி விட்டு விட்டார். அதுமட்டுமன்றி தமிழரசுக் கட்சியை உடைத்தெ

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதி மாவட்டக்கிளையின் வேண்டுகோளை மதிக்க மறுத்துவிட்டார் நவரத்தினம்

## கட்சியை அழிக்க முனைபவருக்கு கட்சியில் இனி இடம் கிடையாது

## வேலணைக்கூட்டத்தில் அமிர் விளக்கம்

தமிழினத்தின் ஒற்றுமையைக் கருதி மீண்டும் தமிழரசுக்கட்சியில் சேர்வதற்கு திரு. வி. நவரத்தினம் பா. உ. மனுச் செய்ய வேண்டும் என்ற ஊர்காவற்றுறைமாவட்டக்கிளையின் கோரிக்கையை, திரு. நவரத்தினம் ஏற்க மறுத்துவிட்டார். அது மட்டுமன்றி தமிழரசுக்கட்சியை 'முறியடித்து விட வேண்டுமென்று மிகத் தீவிரமாக பாடுபட்டு வருகிறார். இப்படிப்பட்டவர், கட்சியில் சேர்வதற்கு இனிமேல் மனுச் செய்தாலும் கூட கட்சி அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இன்று இல்லை. எனவே தான் இந்த தொகுதியில் பிறந்தவரும் 24மணி நேரமும் பொதுநலப் பணியில் ஈடுபடுபவருமான பண்டிதர் இரத்தினம் அவர்களை, கிளிநொச்சி மாவட்டக்கிளையினரின் பூரண சம்மதத்துடன் இத்தொகுதியில் நிறுத்த கட்சியின் நியமனக்குழு முடிவு செய்துள்ளது.

—இவ்வாறு வேலணையில் நடைபெற்ற ஊர்காவற்றுறைத் தொகுதி மாவட்டக் கிளையின் கூட்டத்தில் பேசிய தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் தமது பேச்சில் மேலும் கூறியதாவது:—

ஊர்காவற்றுறை பா. உ. திரு. வி. நவரத்தினம் கட்சிக்கு அவமானம் ஏற்படுத்தும் முறையில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடந்து கொண்டதற்காக கட்சிப் பொதுக்குழு அவரைக் கட்சியிலிருந்துஏகமனதாக வெளியேற்றியது. இதன் பின்னர், கட்சிக்குஎதிராகபல பொய்க் குற்றச் சாட்டுக்களை பகிரங்கமாகச் சுமத்துவதிலும், அறிக்கைகள் விடுவதிலும் திரு. நவரத்தினம் இறங்கினார்.

ஆனல் தமிழினத்தின் ஒற்றுமையை விரும்பிய ஊர்காவற்றுறை மாவட்டகிளையினர், திரு. நவரத்தினம் மீண்டும் கட்சியில் சேர்வதற்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றும் திரு. நவரத்தினம் அப்படி விண்ணப்பித்தால் அதை ஏற்று அவரை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றினர்.

இனத்தின் ஒற்றுமையைக் கருதி தீவுப்பகுதி மாவட்ட கிளையினரின் தீர்மானத்தை கட்சித் தலைமைப் பீடம் ஆலோசிக்க தயாராக இருந்தது.

மாவட்டகிளையின் இத்தீர்மானத்தோடு மாவட்டக் கிளைத்தலைவர் திரு. ச. அருமைநாதர் திரு.நவரத்தினத்தைப் போய்ச் சந்தித்து, கட்சியில் சேர்வதற்கு விண்ணப்பம் அனுப்பும்படி மாவட்டக்கிளை கோரியிருப்பதை தெரிவித்தபோது, அப்படி செய்ய முடியாது என ஒரேயடியாக திரு. நவரத்தினம் மறுத்துவிட்டார். மாவட்டக் கிளையினரின் கட்டளையை மீறிவிட்டார்; மக்களை மதிக்க மறுத்து விட்டார்.

இதுமட்டுமல்ல, இன்று தமிழரசுக் கட்சியை அழித்து விட முயல்பவர்களில் திரு. நவரத்தினமே முதல்ஆளாக நிற்கிறார். இதை அவரது செயல்கள் ஒவ்வொன்றும் நிரூபித்து வருகின்றன. இரு விஷயங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அண்மையில் மாவட்ட சபை மசோதா வேண்டாமென்று தமிழரசார் தான் தன்னிடம் கூறியதாக பிரதமர் கூறியிருந்தாரல்லவா? இதைதமிழரசுத்தந்தைதிரு. செல்வநாயகம் மறுத்தது உங்களுக்கு நினைவு இருக்கலாம். திரு. செல்வநாயகத்தின் கூற்றைப்பிரதமராலும் மறுக்க முடியவில்லை.

ஆனல், திரு. நவரத்தினம் முந்திரிக் கொட்டை போல முந்திக்கொண்டு பிரதமர் சொல்வது சரிதான் என்று தமிழரசுக் கட்சி மீது பழி சுமத்தும் நோக்குடன் அறிக்கை விடுத்தார். பிரதமருக்கு முண்டு சாத்தினர்.

இதேபோல, தமிழினம் தனக்குள் கூடிப் பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டிய மிக முக்கிய பிரச்சினையான போதஞ மொழிப் பிரச்சினை குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் ஒரு சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினேன். இந்த மாநாட்டில்கலந்து கொள்ள திரு. நவரத்தினம் மறுத்தது மட்டுமல்ல அதைக் கண்டித்து தமிழரசுக்கட்சியைத் தாக்கி அறிக்கைவிட்டார். திரு. பொன்னம்பலம் கூட இப்படி நடக்கவில்லையென்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"இத்தகைய சூழ்நிலையில், தமிழரசுக் கட்சி மீது வீண் அபவாதங்களையும் பழிகளையும் சுமத்தி கட்சியை அழித்து விடமுயலும் திரு. நவரத்தினத்துக்கு இனிக் கட்சியில் இடமில்லை.



ஆகவேதான், தமிழரசுக் கட்சியின் கொள்கையிலும், கட்டுப்பாட்டிலும், தமிழரசுத் தலைவர்களிலும் அழியாத நம்பிக்கை வாய்ந்த மக்களைக் கொண்ட இந்த ஊர்காவற்றுறைத் தொகுதியில் பொதுவாழ்வே கண்ணுசக் கொண்ட திரு. இரத்தினம் அவர்களை போட்டியிடும்படி கட்சி பணித்துள்ளது. அவரும் அக்கட்டளையை, கிளிநொச்சித் தொகுதி மக்களின் சம்மதத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஊர்காவற்றுறை தொகுதி மக்கள் கட்சியிலும் கொள்கையிலும் கொண்டுள்ள விசுவாசத்தை அடுத்த தேர்தலிலும் நிலைநாட்டுவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

# 'அமிர்தலிங்கத்தைப் பற்றி செய்யப்படும் பிரசாரம் ஆதாரமற்றது'

—இரத்தினம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றியும் நோக்குடன் இல்லாத பொய்யெல்லாம் இப்போது சொல்லித்திரிகிறார்.

"எனவே இந்நிலையில், தமிழரசுக் கொள்கையில் ஊறித்திளைத்த ஊர்காவற்றுறைத் தொகுதி மக்கள் தமது தொகுதியை தமிழ் காங்கிரசோ வேறுயாருமோ தட்டிச்செல்ல அனுமதிக்க மாட்டார்கள். 24 மணிநேரமும் மக்கள் தொண்டில் ஈடுபட்டிருப்பவரும், தீவுப் பகுதி மண்ணில் பிறந்தவருமான திரு. இரத்தினத்தை இங்குவேட்பாளராகநிறுத்த கட்சி செய்த முடிவை வரவேற்கிறோம். திரு. இரத்தினத்தின் சேவை நமக்கு கிடைக்க இருப்பது தீவுப் பகுதிசெய்துள்ளபேரதிர்ஷ்டமாகும்.

அதுவுமின்றி இத்தனைகாலம் தீவுப்பகுதியின் பிரதிநிதி செய்ய நினைக்காத ஒரு காரியத்தை தீவுப்பகுதிக்கு இருமுறை விஜயம் செய்து மக்கள்படும் கஷ்டத்தை கண்டது திரு. இரத்தினம் செய்ய முன் வந்திருக்கிறார். தீவுபகுதி அபிவிருத்திக்கென ஓர் சபையை அரசாங்கம் நிறுவ வேண்டுமென வற்புறுத்தும் ஓர் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் விரைவில் கொண்டுவர விருக்கிறார்.

இப்படிப்பட்டவர், தீவுப் பகுதியின் பிரதிநிதியானல், நமது பகுதி பொன் கொழிக்கும் பூமியாக மாறிவிடும் என்பதில்ஐயமில்லை. ஆகவே தீவுப்பகுதி மக்கள் சார்பில் திரு. இரத்தினத்தை வருக வருகவெனவரவேற்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

யோகபுரம் தமிழரசுச் செயலாளர்திரு. சிவகாருண்யம் பேசுகையில் திரு. இரத்தினத்தை கட்சியின் நன்மை கருதி தீவுப் பகுதிக்கு கிளிநொச்சி தொகுதி மக்களாகிய நாம் தியாகம் செய்கின்றோமென்று குறிப்பிட்டார்.

திரு. இரத்தினம் பா. உ. நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:—

'தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள் இரண்டு இடங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதை தடுப்பதற்காகத தான் என்னைத் தீவுப்பகுதிக்கு புகுத்தும் நடவடிக்கையில் திரு. அமிர்தலிங்கம் இறங்கியிருப்பதாக அவர் மீது சிலர் பழி சுமத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தப் பிரசாரம் கடைந்தெடுத்த தொரு பொய்ப் பிரசாரமாகும்.

'1965ம் ஆண்டுகிளிநொச்சித் தொகுதிக்கு என்னை வேட்பாளராக நியமிப்பதற்கு திரு. அமிர்தலிங்கம் அவர்களே முழு மூச்சாகப் பாடுபட்டவர். ஊர்காவற்றுறை தமிழரசுக் கட்சியின் கோட்டை என்ற நிலையை மாற்ற விடக்கூடாது என்பதற்காகவும் இத்தொகுதிக்கு இயன்றதொண்டுகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தாலும், இம் மண்ணில் பிறந்த பாசம் என்னை இழுப்பதாலும், கிளிநொச்சித் தொகுதி மாவட்டக் கிளையின் பூரணசம்மதத்துடனே கட்சியின் கட்டளையை ஏற்று இங்கு போட்டியிட முன்வந்துள்ளேன்.'

### கிளிநொச்சித் தொகுதி மாவட்டக்கிளையின் ஒப்புதல்

தீவுப்பகுதி மாவட்டக் கிளைக் கூட்டத்துக்கு முதல் நாள் கிளிநொச்சி மாவட்ட கிளையின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம். திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் ஆரம்பத்தில் திரு. இரத்தினத்தை ஊர்காவற்றுறைக்கு கையளிக்க கிளிநொச்சி மாவட்டக்கிளை உறுப்பினர்களும் பிரமுகர்களும் மறுத்த போதிலும் திரு. அமிர்தலிங்கம் நிலைமையை எடுத்து விளக்கிய பின்னர், கட்சியின் தேவையைக்கருதி அதற்கு ஒப்புக் கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டக் கிளையினர், மற்றும் பிரமுகர்களின் பூரண சம்மதத்துடனேயே திரு. இரத்தினம் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு போட்டியிட இணங்கினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# செக்கோஸ்லவேக்

# சமஷ்டி ஆ

# சிறுபான்மை

செக்கோஸ்லேவேக்கிய சமூகத்தில் காணப்பட்ட வேற்றுமைகளை அகற்றுமுகமாக அண்மையில் இரு சட்டங்கள் இயற்றப்பட்டன. அதில் முதலாவதாக 1968ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி செக்கோஸ்லோவேக்கிய சோஷலிச குடியரசின் தேசிய சபையினல், செக்கோஸ்லவேக்கியாவில் சமஷ்டி ஆட்சி பற்றிய சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. அடுத்ததாக தேசிய இனங்கள் பற்றிய ஓர் புதிய மசோதா அங்கீகரிக்கப்பட்டது.

ஐம்பது வருடங்கள் ஒன்றாக வாழ்ந்த (உலகப் போரிற்கு முன்பும் பின்பும்) அனுபவத்தின் விளைவே இவ்விரு இனங்களும் இப்படியானதோர் சட்டத்தை உருவாக்குவதற்கு உதவிற்று. சமஷ்டி ஆட்சிமுறையின் மூலமே இவ்விரு இனங்களும் சம உரிமைகளைப்பெறவும், தங்கள், தங்கள் போக்கில் ஆட்சி செய்வதற்கும் வழிபிறக்கும்.

இவ்வாறான சமஷ்டி ஆட்சியின் வழிமுறைகள் தாம் என்ன?

### சம அந்தஸ்து

தனித்தனி ஆதிபத்திய உரிமைகளுடைய செக் சோஷலிச குடியரசும், ஸ்லோவேகிய சோஷலிச குடியரசும் சமஷ்டி ஆட்சியில் அங்கம் வகிப்பதற்காகத் தங்கள் ஆதிபத்திய உரிமைகள் சிலவற்றை தாமே விட்டுக் கொடுத்ததே இதில் இடம் பெற்ற முதல் அம்சமாகும். இவ்விரு அரசுகளும் தத்தமக்குரிய சட்ட, உயர், நியாய சபைகளையும், பொதுவான சமஷ்டி சட்ட, உயர், நியாயசபைகளையும் கொண்டிருக்கின்றன.

ஜனநாயக ரீதியிலான சமத்துவமே சமஷ்டி ஆட்சியின் ஓர் முக்கிய அம்சமாகும். ஸ்லோவேக்கிய அரசு பொருளாதாரத்திலும், சனத்தொகையிலும் வலிமை குறைந்ததாகவிருந்தாலும் இப்புதிய சட்டம் யாவர்க்கும் சம அந்தஸ்து, சம உரிமைகள் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்ட தொன்றாகும். இம் மாற்றத்தினல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்கப்பட்ட சிலசைவர்கள் இன்று பௌத்தராக மாற நினைப்பது சாதிக்கொடுமையின் எதிரொலியாகும். சாதியைச் சொல்லி ஒரு சில சைவர்களை ஆலயங்களில் பிரவேசித்து வழிபடாமல தடுப்பது பழக்கமாயிருந்து இன்று குண்டர்கள் தலைமையில் இயக்கமாக மாறியுள்ளது. மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் இதற்கு எடுத்துக்காட்டாகும். வழிபடவரும் அடியார்களை சாதி சொல்லி தடுப்பது சிவநிந்தனையாகும். இதற்கு நரகம் தண்டனையாகும்.

# மதமாற்றத்தை தடுத்துநிறுத்த வழியென்ன?



சி. கதிரவேலுப்பிள்ளை
பா. உ.

சைவத்திற்கு செய்கின்ற இந்த அநீதியை பிழையான சட்டங்களை எடுத்துச் சொல்லி தொடர்ந்துநடத்த மாவிட்டபுரத்தில் முயற்சி செய்யப்பட்டது. கந்தன் கருணையால் அந்த முயற்சிகள் தோல்வியடைந்து சைவம் வெல்லவும் சட்டம் தெளிவாக்கப்படவும் திரு. சுந்தரலிங்கத்தின் வழக்கில உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு உதவியாகியது இனிமேலும இந்த அநீதியை சாதியின் பெயரால்செய்துசைவத்தை அழிக்கவும் சைவமக்களை புத்தராக மாறும்படி கலைக்கவும் நடக்கும் முயற்சி உடனடியாக ஒழியவேண்டும்.

அறியாமையினுல் ஒரு சில சைவர்கள் ஆலயங்களுக்கு வழிபடச் செல்லும எல்லா சைவமக்களையும் ஆலயத்திற்கு வெளியில் வைக்க திட்டமிடுகின்றனர். "ஆலயம் தொழுவது சாலமும நன்று" என்ற முதுமொழிக்கு புறம்பாக எல்லோரையும் நடத்த இவர்கள் முற்படுகின்றனர்.

மாவிட்டபுரத்தில் இந்த திட்டம் ஆலோசிக்கப்பட்டதாக அறிகிறேன். சமூகஞுறைபாடு சட்டத்திற்கு பயந்து தர்மகத்தாக்கள் சட்டத்தையே மீறுகின்றனர். இதனுல் சைவ பெருமக்கள் மாவிட்டபுரக் கோயிலுக்குள் சென்று வழிபடமுடியாமல் பலியாகின்றனர். ஆகவே சைவ பொதுமக்கள் உடன் நடவடிக்கை இது பற்றி எடுக்கவேண்டும். நீதிமன்றத்தில் வழக்கு வைத்து கோயிலை வழமைபோல திறந்து வைக்கவும் வழிபாட்டை பாதிக்கும் சகல தடைகளை நீக்கவும உத்தரவு பெறவேண்டும்.

தர்மகர்த்தாவிற்கு உரிய சட்டத்தையும் கடமையையும் மீறுகின்ற தர்மகர்த்தாவையும் அவர்போன்றவர்களையும் ஆலய நிர்வாகத்தில் இருந்து விலக்கி சைவ பண்புள்ள, சட்டத்தை மீருத, வழிபாட்டிற்கு தடை செய்யாத சைவ பொதுமக்களில் இருந்து புதிய தர்மகர்த்தாக்களை நீதிமன்ற-மூலம் நியமிக்கவேண்டும். இந்த நடவடிக்கை மாவிட்டபுர கந்தசாமிகோயிலுக்கும் அது போன்ற மற்றக் கோயில்களுக்கும் எடுக்கப்படவேண்டும்.

## இந்துமதத்தில் தீண்டாமை கூறப்பட்டிருக்கிறதா?

பிறப்பினுல் உயர்வு—தாழ்வு ஏற்படுகின்றது என்ற தத்துவத்தை இந்து மதம் ஏற்றுக் கொள்கிறதா? உயர்ந்த சாதி—தாழ்த்த சாதி என்ற பாகுபாட்டை இந்து மதம அங்கீகரிக்கிறதா? தீண்டாமை என்ற அம்சம் இந்துமத சாத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா? என்ற கேள்விகளுக்கு என்னுடைய தீர்க்கமான பதில், 'ஒருக்காலும் இல்லை' என்பதுதான். பிறப்பால் உயர்வு தாழவு அடைவதும், உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற வர்ணுச்சிரமமும், தீண்டாமை தத்துவமும் இந்து தர்மத்தின அம்சங்கள் என்று ஆன்மீகத்துறையில் உயர்ந்த பீடத்தில் இருப்பவர்கள் கூடச் சொல்லுகிறுர்கள். உண்மையில் அவர்களை இந்து தர்மத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள் என்று தான் கூற வேண்டும்.

—இவ்வாறு சென்னையில் நடைபெற்ற சங்கரர்—சண்மத மாநாட்டில் பேசிய இந்திய உயர் நீதிமன்ற முன்ஞள் நீதியரசரும், பம்பாய் பல்கலைக் கழகத் துணை வேந்தருமான டாக்டர். கஜேந்திரகடகர் தெரிவித்துள்ளார்.

## [illegible]வக்கியாவில் ஆட்சியும் [illegible]மையினரும்

[illegible] விசேட பாதுகாப்பு [illegible] தேசிய இனங்களிற்கு அளிக்கப்பட வேண்டியதாயிற்று. அதாவது இனங்களின் அடிப்படை நலன்களைப் பொறுத்த மட்டில் வாக்களிக்கும் போது ஒரு சாரார் மற்றையோரிலும் பார்க்க பெரும்பான்மை பலம் பெருது தடுக்கவே இப் பாதுகாப்புகள் அளிக்கப்பட வேண்டியிருந்தன.

செக் கோஸ்லோ வேக்கிய சமஷ்டி ஆட்சியின் முக்கிய அரசியற் பொறுப்பு செக் மக்களிற்கும், ஸ்லோவேக்கியர்களுக்குமிடையே காணப்படும் பொருளாதார அமைப்பு, பொருளாதார சமூக வேறுபாடுகளைக் களைவதேயாகும்.

ஜனுதிபதியே நாட்டின் தலைவராகவிளங்குவார். மக்கள் மன்றம், ஆட்சிமன்றம் ஆகிய இருவேறு பிரிவுகளை செக்கோஸ்லோவேக்கிய நாடாளுமன்றம் கொண்டிருக்கும். சமஷ்டி ஆட்சிப் பொறுப்பு இந்நாடாளுமன்றத்திடந்தான். (ஏனெனில் இம்முறையில் மக்களின் நலன்களும், ஜனநாயகமும் சிறந்த முறையில் பிரதிநிதித்துவம் பெறும் என்பதாலேயே).

செக்கோஸ்லோவேக்கிய சமஷ்டி அரசாங்கமே மேலான அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இரு இனங்களும் தத்தமது ஆட்சியை நடாத்துவதற்கு செக் தேசியசபை, ஸ்லோவேக்கிய தேசியசபையென இரு சபைகளைக் கொண்டுள்ளன. இவ்விரண்டினது அதிகாரங்களும் நாடாளுமன்றத்தினுல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

### தேசிய இனங்கள்

பணப்புழக்கத்தைப் பொறுத்த மட்டில் ஒரே நாணயமே இவ்விருபகுதிகளிலும் கட்டுப் பாடின்றி உபயோகத

(9ம் பக்கம் பார்க்க)

ஹானு பௌலிக்கோவா

## சுதந்திரன் கருத்துக்கு ஆதரவு பெருகுகிறது!

# 'ஸ்ரீலஸ்ரீ'யை நாவலர் சிலையில் பொறிக்கவேண்டாம்!

இம்மாத இறுதியில் நிறுவப்படவிருக்கும் நாவலர் சபையில் 'ஸ்ரீலஸ்ரீ' என்ற வடமொழிச் சொல் இடம் இடம பெறுவது தவிர்க்கபபட வேண்டுமென்றும் அதற்கேற்ற தூய தமிழ்ச் சொல்லே இடம்பெற வேண்டுமென்றும் கடந்த வாரம் சுதந்திரன் சுட்டிக் காட்டியிருந்த கருத்துக்கு நாடு முழுவதிலுமுள்ள பல தமிழ் மன்றங்கள் ஆதரவு தெரிவித்துள்ளதுடன், 'ஸ்ரீலஸ்ரீ' இடம் பெறுவதைத் தவிர்க்குமாறு கோரி நாவலர் சபையினருக்கும் கடிதங்கள் அனுப்பிவருகின்றன.

மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றம் இதுபற்றி பின்வரும் கடிதமொன்றை ஆறுமுக நாவலர் சபைத் தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியத்துக்கு அனுப்பியுள்ளது:-

தமிழிற் சொல் இல்லாத போது பிறமொழியிற் கடன் பெற்று அதனைத் தமிழ் ஒலி அமைப்பிற்கேற்ப மாற்றுவதற்கு யாம் மறுப்பில்லை. ஆனுல் தமிழில் எல்லவரும் ஏற்றும் எழில் மிகு சொல் இருக்கும்போது அதனைவிடுத்துப் பிறமொழிச் சொல்லை யாமே எம்மீது திணிப்பது எம்மை அறிஞர் உலகம் பார்த்து எள்ளிநகையாட இடம் அளிக்கும் அனறோ.

திருவள்ளுவர் காலந்தொடங்கி இற்றைவரை தமிழ் அறிஞருக்கும் சமயச் சான்[illegible] கோயில்களுக்கும் தமிழில் எழுந்த [illegible] வழியாக வழங்கப்பட்டு வரும் அடைமொழி "திரு" வேயன்றி ஸ்ரீ அல்ல. திருவள்ளுவர், திருமூலர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், திருவண்ணுமலை, திருவொற்றியூர், திருக்கோணமலை, திருக்குறள், திருவாசகம், திருக்கோவையார், திருவந்தாதி போன்ற பெயாகள் அனைத்தும் யாம் முன்பே மொழிந்த கருத்தினையன்றோ வலியுறுத்திநிற்கின்றன.

ஈழத்திற் சில ஆண்டுகளுக்கு முன் 'ஸ்ரீ'யை எதிர்த்து செந்தமிழர் போரிட்டதையும் சிலர் உயிரைப் பறி கொடுத்ததையும் தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறோம். அத்துடன் இன்று தமிழ் நாட்டில் 'ஸ்ரீ'க்குப் பதில் 'திரு' என்ற அடைமொழி தமிழக அரசினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டு எங்கும் கையாளப்பட்டு வருவது உலகறிந்த உண்மையன்றோ!

"ஸ்ரீலங்கா மகா வங்கி" என்று எம் வங்கிக்கு எம் வங்கி ஆட்சிபீடம் பெயரிட முனைந்தபோது நாட்டின் தலைமை அமைச்சர் வரை சென்று போர்க்குரல் எழுப்பி, 'இலங்கை மத்திய வங்கி' என்று பெயரிடச் செய்த நாம் எவ்விதம் தாங்கள் கையாளும் ஸ்ரீலஸ்ரீ என்ற சொற்ருெடரை ஏற்க முடியும். ஒரு 'ஸ்ரீ'யை எதிர்த்த நாம் இரண்டு இடத்தில் 'ஸ்ரீ' வரும் 'ஸ்ரீலஸ்ரீ' என்ற சொற்ருெடரை எப்படித்தான் உள்ள நிறைவோடு ஏற்க முடியும்.

ஆதலால் அருள் கூர்ந்து "ஸ்ரீலஸ்ரீ" என்ற சொற்ருெடருக்குப பதிலாக ,திருப பெருந்திரு' 'மறைத்திரு', 'உயர்திரு' என்ற ஏதாவது ஒரு செந்தமிழ்த் தொடரைக் கையாண்டு தமிழ் மரபைப் பேணித் தமிழுக்கு ஆக்கம் நல்கி தமிழ் மக்களின் உண்மை மொழி உணர்ச்சிக்கு மதிப்பளிக்குமாறு வேண்டுகிறோம்.

கொழும்பு தமிழ் எழுத்தாளர் மன்றம், கொழும்புத் துறை சூரியோதய இளைஞர் முன்னேற்றக் கழகம், குரும்பசிட்டி நலன்புரி சபை அகில இலங்கை தமிழ்ச்பசும் வாலிப முன்னணி, கலைக் கழகம், ஆகியவையும் 'ஸ்ரீலஸ்ரீ' என்ற வட மொழி வாசகத்தை நாவலர் சிலையில் பொறிப்பதை கடுமையாக எதிர்த்து நாவலர் சபையிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

## நாவலர் சபைக்கு தமிழ் மன்றங்கள் கோரிக்கை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த மத மாற்றமும் சிறுபான்மைத் தமிழரும்

சிறுபான்மைத் தமிழரின் தலைவரென 'லேபல்' ஒட்டித் திரியும் திரு. சுந்தரம் என்பவர் 1-6-69 'தினபதி'யில் ''அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று பாடசாலைகளிலும் சிங்கள மொழி மூலம் போதிக்கப்படுவதையும், சிறுபான்மைத் தமிழர், புத்தமதத்தைத் தழுவிச் சிங்களவர்களாக மாறுவதையும், தடுப்பதற்குத் தமிழரசுக் கட்சிக்கு என்ன அதிகாரமிருக்கிறதென'' அறிக்கை விடுத்துள்ளார்; அத்துடன் ஆலயப்பிரவேசத்தில் அக்கறைகாட்டவில்லையெனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

## திரு. சுந்தரத்தின் குதர்க்கவாதம்!

1. திரு: சுந்தரமும், தினபதி எஸ். டி. சிவநாயகமும் செனேற்றர் பதவி கிடைக்காததினால் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறியவர்களென்று கூறப்படுவது பெரும்பாலோருக்குத் தெரியும்.

2. மதம் மாறிய குடும்பத்தில் தோன்றிய திரு. சுந்தரம் தனது இனத்தினரை இப்பொழுது புத்த மதத்திற்கு மாறும்படி அழைப்பதை எவரும் குற்றம் சொல்ல முடியாது. ஆனால் சிறுபான்மைத் தமிழரிலும் பல பிரிவினருண்டு. அவர்களை மதம் மாறும்படி அழைப்பதற்கு உங்களுக்கும் அதிகாரமில்லையே!

3. போதனையைச் சாதனையில் காட்டுவது தான் போதிப்பவர்களுக்கு முறை. ஆகையால், நீங்கள் முதலில் புத்தமதத்தைத் தழுவிப் பெயரையும் மாற்றிச் சிங்களவராகிக்கொண்டு உங்களைப் பின்பற்றுமாறு உங்களைச் சார்ந்தவர்களை மட்டும் அழைப்பதற்கு முன்வருவீர்களா?

4. சிறுபான்மைத் தமிழரைப் பற்றிப் பேசுவதற்குத் தமிழரசுக் கட்சிக்கு அதிகாரமில்லையென வாதிடுகிறீர்கள். அப்படியானால் சைவ ஆலயங்களைத் திறந்துவிடுமாறு கோருவதற்குக் கிறிஸ்தவரான உங்களுக்கு என்ன அதிகாரமுண்டு? சைவசமயத்தவர்களிடையேயுள்ள தீண்டாமைப் பிரச்சினை காலத்தின் மாற்றத்தையும் சூழ்நிலையையுமறிந்து சைவர்களால் தீர்க்கப்படவேண்டுமேயொழிய வேற்று மதத்தவர்கள் இவ்விஷயத்தில் தலையிடுவதற்கு உரிமையில்லையல்லவா?

5. கிறீஸ்தவத் துறவிகளிடமும் பௌத்த துறவிகளிடமும் சாதிப் பாகுபாடு இருக்கின்றதென்பதை நீங்கள் அறியவில்லையா? ஒவ்வொரு போயா தினத்திலும் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகளில் சாதி அடிப்படையில் புத்தமதத்தினர்களால் திருமண விளம்பரம் செய்யப்படுவதை நீங்கள் படிக்கவில்லையா?

6. மூன்று பள்ளிக்கூடங்களையும் நிறுவுவதற்குச் சிறுபான்மைத் தமிழர்களிடம்தான் நிதிவசூல் செய்யப்பட்டதென்பதை மறந்துவிட்டீர்களா? இவை மூன்றும் தமிழ் பாடசாலைகளாக ஆரம்பிக்கப்படுவதற்கு வசூல்செய்த பணத்தை ஏப்பம் விட்டவர்கள், இரகசியம் வெளிவருவதற்கு முன்பு, பௌத்த நாமம் சூட்டி; அரசாங்கத்தையே ஏமாற்றிவிட்ட வரலாறு உங்களுக்கும் தெரிந்ததுதானே?

7. பௌத்த மதத்திற்குச் சிறுபான்மைத் தமிழர்கள் மாற விரும்புகிறார்களென்று அகில இலங்கை பௌத்த காங்கிரஸ, பௌத்த துறவிகளின் சங்கங்கள், யாழ் நாகவிகாரையின் பொறுப்பாளர்கள் அமைச்சர் இரியகொல்லை, கல்வியமைச்சின் அதிகாரிகள் ஆகியோரைச் சாகசமாக ஏமாற்றித் தங்களது காரியத்தை சாதித்துக்கொண்டவர்களின் தந்திரத்தைப் பாராட்டுவதற்கு முன்பு, அவர்களது சூழ்ச்சி இப்பொழுது அம்பலமாகிவிட்டதே.

8. வேறு பள்ளிக்கூடங்களில்படித்துக்கொண்டிருந்த அப்பாவிக் குழந்தைகளைப் பலவந்தமாக அழைத்துவந்து, பௌத்த பள்ளிக்கூடத்தில், தற்காலிகமாகச் சேர்ப்பித்த சதி வெளிவந்துவிட்டது உங்களுக்கும் ஏற்கனவே தெரியும்தானே?

9. ஈழநாட்டில் ஒரே இனம், ஒரே மொழி, ஒரே மதம் என்று வெறிபிடித்தலையும் பிறபோக்குவாதிகளிடம், அற்பக்தனமான, சலுகைகளை இரந்து சிரம்தாழ்ந்து அடிபணிந்து எடுத்துக்கொண்டு, பெற்ற தாயையும் வளர்த்த தந்தையையும் விலைகூறி விற்றவர்கள் என உங்களையும் உங்களைச் சார்ந்தவர்களையும் வருங்காலச் சந்ததியினர் பழித்து இழித்துக் கூறுவார்களென்பதை நீங்கள் உணரவில்லையா?

10. சிறுபான்மைத் தமிழர்களுக்குச் சைவ ஆலயங்களைத் திறந்துவிடவேண்டுமென்று முதன்முதலில் பிரசாரத்தில் ஆரம்பித்து அவர்களுடன் சமபந்தி போசனம் செய்து விலாசம் தெரியாமல் ததிங்கணதோம் போட்டுக்கொண்டிருந்த திரு. ஞானப்பிரகாசம் நல்லையாவைச் செனேற்றர் ஆக்குவித்தது தமிழரசுக் கட்சியல்லவா?

11. மாவிட்டபுரம் ஆலயம் சம்பந்தமாகச் சிறுபான்மைத் தமிழர்களுக்காக நீதிமன்றத்தில் வாதாடிவருவதும் தமிழரசுக் கட்சியல்லவா?

12. தீண்டாமையை ஒழிக்க வேண்டுமெனத் தனது நோக்கங்களில் ஒன்றாகப் பொன்னெழுத்துக்களால் பொறித்து வைத்திருக்கும் கட்சி, இந்த நாட்டில், தமிழரசுக்கட்சி ஒன்று மட்டும் தானென்று, தமிழரசுக் கட்சியின் பிரசாரக்கூட்டங்களில் நீங்கள் பேசியதை மறந்துவிட்டீர்களா?

13. அமைச்சர் இரியகொலை, அவரது தொகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட சாதியினரான, பௌத்தர்கள், அவருக்கு எதிராக இருப்பதனால் அவர்களை வடமேல் மாகாணத் தொகுதியொன்றுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறாரென்பது சுலநலத்திற்காக வேஷம் போடும் உங்களுக்குத் தெரியாமலிருக்க முடியாதுதானே!

14. கல்வித் திணைக்களத்தில் ஊழியராகவிருந்து ஆடிய நாடகங்களும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு ஆசிரியர் உத்தியோகம் எடுத்துத் தருவதாகக் கூறி அப்பாவி வாலிபர்களிடம் பல நூற்றுக்கணக்கான பணத்தை வாங்கி ஏப்பம் விட்டு ஏமாற்றித் திரியும் முன்னணியினரின் வரலாறும், நீங்கள் காப்புறுதியின் பேரில் செய்த திருவிளையாடல்களும் 'குத்தீட்டி'யாருக்குத் தெரியும். அதன் விபரங்களை உரியகாலததில் வெளியிடுவேன்.

—"குத்தீட்டி"


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14 டாம் வீதி, கொழும்பு-12.


## எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

டரின் தம்பி அமெரிக்காவில் அவங்க அம்மா பேரில ஒரு மருத்துவ விடுதி திறந்திருக்காராம். அதில வேலைசெய்ய இலங்கையில இருந்து நம்ம டாக்டரையாவையே தெரிந்து சிபார்சு பண்ணி அனுப்பும்படி எழுதியிருக்காராம். டாக்டர் நிர்மலா அக்காவைப் போகும்படி கேட்டாராம். அக்காவுக்குப் போகக் கொள்ளை ஆசையாம். ஆனால் அதிட அப்பா அம்மா மறுத்திட்டாங்களாம். நம்ம டாக்டர் ஐயா கூட சிலநேரம் அங்கேயே போகலாமாம்...என்றாள்.

அவள் பேசிய தோரணையில் இருந்து அவள் ஏதோ ஓர் அடிப்படை ஆசையை மனதில் வைத்துக்கொண்டு பேசுவதுபோல தோன்றியது. அதனால் அவள் உள்ளக்கிடக்கையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன ''அவளுக்குக் கொடுத்து வைத்தது. அவ்வளவுதான போல இருக்கு'' என்றான் ரகு.

''அண்ணை, உங்களிடம் ஒன்று கூறட்டுமா டாக்டர் ஐயாவிடம்கூறி அங்கு எனக்கொரு வேலை வாங்கித்தந்தால் நல்லதல்லா...? என்றாள் பவானி. அவள் பேச்சு ரகுவைச் சிரிக்கத் தூண்டியது. ஆயினும் தன் மனதில் உள்ளதை அவளிடம் மறைத்து, அதற்கென்னம்மா டாக்டரிடம் கேட்டால் போயிற்று! ஏற்கெனவே, நான் இங்கு உனக்கொரு நல்லவேலை ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிறேன். அதன் முடிவு நாளைக்கு விடிந்தால் தெரியும். அந்த முடிவைப் பார்த்து டாக்டரிடம் சென்று கேட்கிறனம்மா... இப்போ நீ போய் நிம்மதி [illegible]

பவானியின் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தை ஒவ்வொன்றும் அவனுக்குப் புத்துயிர் அளிப்பதாக இருந்தன. நிர்மலாவை அவன் வாயார வாழ்த்திக்கொண்டான். அவள் வந்திராவிட்டால் இப்படியான ஒரு மகிழ்ச்சிச் செய்தியை அவன கடைசிவரை அறிந்திருக்க முடியாதல்லவா? ஜெயநாதனின் வீட்டில் இருந்து வந்த நேரந்தொடக்கம் அவன் மனதில் எழுந்துகொண்டிருந்த பிரச்சினைக்கு ஒரு முடிவுஏற்பட்டதாக நினைந்து ஆறுதலடைந்தான். விடிந்ததும் பாவனியையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு ஜெயநாதன் வீட்டுக்குப் போவதாக அவன் தீர்மானித்திருந்தான். அந்தத் தீர்மானம் நிறைவேறும் பட்சத்தில் திரும்பவும் உமா அவனுக்கொரு பிரச்சினையாக இருப்பாள் என்பதே அவன் எண்ணமாக இருந்தது. ஜெயநாதன் கூறியது போல அவர்கள் திருமணஞ் செய்து கொள்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்பதும் அவனுக்குத் தெரியும்.

அந்த எண்ணத்தை முதலாவதாக அவன் விரும்பவில்லை. உமாகூட அதை விரும்பமாட்டாள் என்பதை அவன் நிட்சயமாக நம்பினான். உமாவைவிட்டு அவன் கவலைப்படுவதற்கு இனி ஒன்றுமில்லை. அவள் வளர்ந்த பெண். படித்தவள். சொத்து சுதந்திரம் உடையவள். எப்படியாவது தன் வாழ்நாளைக் கழித்துக்கொள்வாள் என்பதை அவன் உணர்ந்திருந்தான். ஆயின் தன்னால் அவளது வாழ்வு அஸ்தமித்துவிடக்கூடாது என்பதே அவன் ஏக்கமாக இருந்தது. பஞ்சும் நெருப்பும் ஒன்றாக இருப்பதை எவரும் அனுமதிக்கமாட்டார்கள். அதே நிலையைத்தான் அவனும் கடைப்பிடிக்க முனைந்தான். அவன் எண்ணத்திற்கு இப்போது நிர்மலா கடவுள் போல வந்து கைகொடுத்தாள். திடீர் என எழுந்த ஓர் இன்பக் கிளுகிளுப்பில் குழந்தையை விரித்திருந்த படுக்கையில் வளர்த்திவிட்டுப் பக்கத்தில் படுத்துக்கொண்டான் ரகு.

—தொடரும்

## 'தூற்றல்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

நடை' உலகத்தின் அப்பாவி ஆசிரியருக்கு நினைவூட்டுகிறோம். தமிழரசுத்தந்தையின் முதுமைப்பருவத்தை இழித்துப் பழித்து, விவேகானந்த சபையில் நடந்த கூட்டமொன்றில் பேசமுயன்று அங்கு திரண்டிருந்த மக்களிடம்சிக்கித் தவித்தசங்கதியை மறந்திடவேண்டாம். தொடர்ந்தும் வாலாட்டினால், தமிழ் மக்கள் தமிழ் உலகத்தின் வாலை ஒட்ட நறுக்கிவிடுவார்கள்.


மாயாஜாலம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக் கொண்டு காதல் பிரச்சினைக்கு இருவரின் பெயரை எழுதினால் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்துவைக்கப் படும். மற்ற எல்லா வித மந்திரங்களும் எங்களால் செய்யப்படும். இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

நீலன் கந்தசாமி மந்திரவாதி.
நிட்டம்புவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள 'அடிமை முகாமில்'

# தமிழ் பிள்ளைகள் பட்ட கொடுமை!

தென்னிலங்கைக்கு சிங்களம்படிப்பதற்கென வடஇலங்கையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட நூறு சிறுபான்மைத் தமிழ்மாணவர்களின் பரிதாபகரமான கதை சுதந்திரனுக்கு கிடைத்திருக்கிறது. தமது பிள்ளைகள் அடிமைகளை விடக் கேவலமாகக் கொடுமைப்படுத்தப்பட்டதாக அப்பிள்ளைகளின் பெற்றோர்கள் பலர் கண்ணீர் வடிய சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தனர்.

இப்பிள்ளைகள், சில மாதங்களுக்கு முன் பௌத்தர்களாக்கப்பட்டு, சிங்களம்படிப்பதற்கென காலிக்கும் மாத்தறைக்கும் அழைத்துச் செல்லப்பட்டது தெரிந்ததே. இவர்களது படிப்புக்கான ஏற்பாடுகளையும் அகிலஇலங்கை பௌத்த காங்கிரசின் அனுசரணையுடன் தமிழ் பௌத்த காங்கிரசினரும் பௌத்த பிக்குகள் சிலரும் தாமே ஏற்றுக் கொள்வதாக கூறி தென்னிலங்கைக்கு அழைத்துச் சென்றனர்.

ஏதோ, கஷ்டப்படும் தமது பிள்ளைகள் படித்து முன்னேறட்டும் என்ற ஆசையினால், இத்தந்திரத்திலுள்ள ஆபத்துக்களைப்பற்றி சிறிதும் சிந்திக்காது சில அப்பாவிப் பெற்றோர்களும் இதற்கு சம்மதித்தனர்.

ஆனால், சிங்களம் படிப்பதற்கென அழைத்துச் செல்லப்பட்ட இத்தமிழ் மாணவர்கள், பாடசாலைகளையல்ல; பாழுங்கிணற்றைத்தான் கண்டார்களாம்; அறிவுக் கூடத்தையல்ல, அடிமை முகாமையே கண்டார்களாம்;

இப்பிள்ளைகளுக்கு சிறிதுகூடகல்வியூட்டப்படவில்லை. ஆனால் கொடுமையாகவேலை வாங்கப்பட்டனர். புல்லு வெட்டச் சொன்னார்கள்; தோட்டம் கொத்தச்சொன்னார்கள்; அதிகாலையில் எழுந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள ஆற்றிற்கு சென்று தண்ணீர் தூக்கி வரும்படி பணிக்கப்பட்டனர். கூட்டிப் பெருக்கச் சொன்னார்களேதவிர கூட்டல் பெருக்கல் கற்றுத்தரவில்லை. சில பிள்ளைகளின் ஒழுக்கத்தை கெடுக்கவும் முயற்சி நடந்ததாம்.

சீனி போடாமற் தேனீர் கொடுப்பார்களாம். சீனி இல்லையே என்று யாராவது ஒரு பிள்ளைகேட்டால்,

## பெற்றோர்கண்ணீர் சிந்தக் கூறிய சோகவரலாறு!

உங்களுக்கென்னடா சீனி, "பனங்கொட்டைகள்" எப்படா சீனி போட்டுக் குடித்தார்கள்? என்று கூறி உள்ளம் நோகச்செய்தார்கள்.

இந்த அடிமை முகாமில் தெரியாத்தனமாக சிக்கிவிட்டோமே என்றி பல பிள்ளைகள் கண்ணீர் விட்டழுதனர். ஆனால் செய்வது தெரியாது திக்குமுக்காடினர். தங்கள் வீட்டுக்குகடிதம்எழுதிஇதை அறிவிக்கலாமென்றால், இவர்கள் எழுதும் கடிதங்கள் ஒன்று கூட தபாலில் சேர்க்கப்படாது தடுக்கப்பட்டதாம். அதேபோல தாய் தந்தையர் எழுதும் கடிதங்களும் இவர்கள் கைக்கு கிடைக்கவிடாது கிழித்து வீசப்பட்டு விடுமாம்.

சிங்களம் படிக்கவென்று கூட்டிவந்து தம்மை அடிமைகளாக்கித் துன்புறுத்தும் கொடுமையை சகிக்கமாட்டாது இப்பிள்ளைகள் பலர், சொல்லாமல் கொள்ளாமல் தங்கள் இருப்பிடங்களிலிருந்து இரவோடிரவாக கம்பி நீட்டினராம்.

இருந்தும் எங்கேபோவது? சாப்பாட்டுக்கு வழியென்ன? கையிலோ காசில்லை. தெருத் தெருவாக பிச்சையெடுக்க ஆரம்பித்தனர்.

இந்த நிலையில்தான் ஒரு பிள்ளையிடமிருந்து அவரது தந்தைக்கு ஓர் கடிதம் வந்தது. அக்கடிதத்தில் தான் அங்கு நடந்த இவ்வளவு கொடுமைகளும் குறிப்பிடப்பட்டிருக்கிறது: அக்கடிதத்தின் இறுதியில், தன்னை இத்தனை நாட்களுக்கிடையில் வந்து கூட்டிச் செல்லாவிட்டால் தனது பிணத்தைத் தான் பார்க்கமுடியும் என்று அப்பிள்ளைஎழுதியிருந்ததாம்

இந்தக் கடிதத்தின் பின்னரே, தங்கள் பிள்ளைகள் துன்புறுத்தப்படுவது அப்பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு தெரியவந்தது. அதனால் தங்கள் பிள்ளைகளை ஒவ்வொருவராக ஊருக்கு அழைத்து வரத் தொடங்கினர்.

'அடிமைமுகாமிலிருந்து' தப்பியோடிய சில சிறுவர்கள் இடந்தெரியாமல் அலைந்து எங்கோ ஒரு சிங்களக் கிராமத்தில் பிச்சையெடுப்பதை அகஸ்மாத்தாகக் கண்ட கம்யூனிஸ்ட் எம். பி. யொருவர் அவர்களை உடனே யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தாராம்.

"சிங்களம் படிக்கச் சென்றவர்கள் அடைந்த இக் கொடுமையைப் பற்றி சிறிதும் சிந்திக்காது மீண்டும் சிங்கள பௌத்தவெறியர்களின் ஆசை வலைக்குள் சிறுபான்மைத்தமிழர்களை சிக்க வைக்க சிலர் முயலுகிறார்கள். சிறுபான்மைத் தமிழ் மக்கள்— குறிப்பாக கொடுமைப்படுத்தப்பட்ட பிள்ளைகளின் குடும்பத்தினர், இப்படிப்பட்டவர்களை செருப்பால் அடித்துத் துரத்தவும் தயங்க மாட்டார்கள்"

—இப்படி உணர்ச்சி பொங்கவழியக் கூறினர் துன்புறுத்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்.

## ஆண்டு விழா

அஞ்சல் எழுதுவினைஞர்சங்கத்தின் 7வது ஆண்டு விழா இம்மாதம் 20ந் திகதி காலை 9.30க்கு கொழும்பிலுள்ள தேயிலைப் பிரசார சபை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

## சமஷ்டி..

(7ம் பக்கத் தொடர்ச்சி)

திலிருக்கும். வேற்றுமையற்ற சமூக விலைவாசி விதிகளும், ஒருங்கிணைந்தபொருளாதார முன்னேற்றமும் சீராக இயங்கும். இயலுமானவரையில் முன்பே ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் தொடரப்படும்.

சமத்துவம்

1968ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய சமஷ்டிச் சட்டத்தின் பிரகாரம் செக்கோஸ்லோவேக்கிய சோஷலிச குடியரசு மற்றைய இனங்களைச் சார்ந்த தனது பிரஜைகளிற்கு பொருளாதார, கலாச்சார, அரசியல் முன்னேற்றத்தில் சமத்துவம் வழங்கப்படுமென உறுதியளித்திருக்கின்றது. பிரதிநிதிகள் சபையிலும், உயர்சபையிலும் சனத்தொகை விகிதப்படி இவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படுமென அவ்வுறுதிமொழி மேலும் கூறுகிறது. இவ்வினத்தவர்களின் உரிமைகளைப் பேணுவதற்கும், குறிக்கப்பட்ட நலன்களைப்பற்றி முடிவு செய்வதற்குமாக விசேட செக்ஸ்லோவேக்கிய தேசியசபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

புதிய சட்டத்தின் மூன்றாவது ஷரத்து, சகல பிரஜைகளுக்கும் சொந்த மொழியிலேயே கல்வி புகட்டும் உரிமை, அரசாங்கத்தோடு தொடர்புகொள்ளும் போது சொந்த மொழியையே பாவிக்கும் உரிமை, தேசியகலாச்சார, சமூக நிலையங்களோடு கலந்து பணியாற்றும் உரிமை, பிரசுரிக்கும் உரிமைபோன்ற உரிமைகளையளிக்கின்றது. எந்தவொரு இனத்தினதுமுன்னேற்றத்தையும் தடுக்கும் செயல்களை புதியசட்டம் தடைசெய்கின்றது.

## போதனா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பும் மொழியைப் போதனா மொழியாக்கும் திட்டத்தை தமிழ் காங்கிரஸ் எதிர்க்க கூடாது என்று தெரிவிக்கப் பட்டதாகவும் அறியப்படுகிறது.

இந்துப் பல்கலைக் கழகம் கிடைக்குமானால், அதைச் சாட்டாகக் கொண்டு அடுத்த தேர்தலை முடித்து விடலாம் என்ற பகற்கனவுடன், போதனாமொழி விஷயத்தில் அக்கறை செலுத்துவதில்லையென காங்கிரஸ் தலைமை அந்தரங்கமாக தீர்மானித்துள்ளதாம்.

### இளைஞர்களைச் சந்திக்க அச்சம்

இதற்கிடையில் இம்மாதம் 14ந் திகதி ஈழத் தமிழ் இளைஞர் இயக்கத்தினர், யாழ். மாநகரசபை கமிட்டி அறையில் கூட்டும் சர்வகட்சி மாநாட்டிலும் திரு. பொன்னம்பலம் கலந்து கொள்வது சாத்தியமில்லை யென தமிழ் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம்மாநாட்டிலும் கலந்து கொள்ளாமற் தட்டிக்கழிப்பதற்காகவே அன்றைய தினம் திரு. பொன்னம்பலம் மற்றோர் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. துடிப்பு மிக்க தமிழ் இளைஞர்களிடம் சிக்கிக் கொண்டால் அவதிப்படவேண்டி வருமென பொன்னம்பலம் அஞ்சுகிறாராம்-

## பொன்னம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களே தீர்மானித்துக் கொள்வார்களாக.

★

தமிழினத்தை ஒழித்துக் கட்டச் சதித் திட்டம் தீட்டி செயற்படும் யூ. என். பி. ஆட்சியாளருக்குத் தொடர்ந்து எஞ்சியுள்ள காலமும் ஒத்துழைப்புக் கொடுப்பதற்கு ஒரு காரணத்தைக் கண்டு பிடித்திருக்கிறார் திரு. பொன்னம்பலம். இந்த அரசாங்கம் அதன் பூரண வயது வரை நீடித்தால், அதற்குள் இந்துப் பல்கலைக் கழகம் ஒன்றைக்கொண்டு வந்து உங்கள் முன் இறக்கி விடுவேன் என்று அரசாங்கத்துடன் தொடர்ந்தும் ஒட்டிக் கொண்டிருப்பதற்குக் காரணம் கூறியிருக்கிறார் திரு. பொன்னம்பலம்.

யூ. என். பி. ஆட்சி தமிழினத்துக்கு இழைத்து வரும் கொடுமைகள் கண்டு தமிழினம் பொங்கியெழுந்து விட்டது. தமிழ் இளைஞர்கள் போர்க்கோலம் கொண்டுள்ளனர். இந்த நிலையிலும் தமிழினத்தைச் சுளையோடு விழுங்கி வரும் யூ. என். பி. ஆட்சிக்கும் தமிழ் காங்கிரஸ் பூரண ஆதரவு அளித்து வருவது கண்டு கொதிப்படைந்திருக்கிறார்கள். யூ. என். பி. யில் இன்னும் ஒட்டிக்கொண்டிருப்பதற்கு ஏதாவது காரணம் கூறவேண்டுமென்பதற்காக 'இந்துப் பல்கலைக் கழகம்' என்ற கானல்நீரைக் காட்டுகிறார் திரு. பொன்னம்பலம்.

நாம் அறுதியிட்டு இங்கு கூறி வைக்க விரும்புகிறோம். இந்த அரசாங்கம், இந்துப் பல்கலைக் கழகமல்ல, வேறு எந்தப் பல்கலைக் கழகத்தையுமே தமிழினத்துக்கு வழங்க ஒருபோதும் முன்வர மாட்டாது. அப்படி வழங்கும் என எதிர்பார்ப்பவன் ஒன்றில் அரசியல் முட்டாளாக இருக்க வேண்டும்; அல்லது மக்களை ஏமாற்றுவதற்காக அப்படிக்கூற வேண்டும்.

திரு. பொன்னம்பலத்துக்கு சுதந்திரன் சவால் விட்டுக் கூறுகிறது. இந்துப் பல்கலைக்கழகத்தை இந்த அரசாங்கம் ஒருபோதுமே வழங்கப்போவதில்லை. ஒருவருடத்தில் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவி விடுவேன்; அதற்காகவே அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கிறேன் என்று சமாதானம் சொல்லும் திரு. பொன்னம்பலம், இந்த ஓராண்டு காலத்தில் அது நடக்காவிட்டால், அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிவிடத்தயாராயிருக்கிறாரா? என்று கேட்க விரும்புகிறோம்.

தமிழ் காங்கிரஸ் எந்தக் காலத்திலும் யூ.என்.பி.யை விட்டு வெளியேறாது; இது மக்களுக்குத் தெரிந்த ஒன்று. இந்துப் பல்கலைக் கழகம் பெறுவதற்காகவே இன்னும் இருக்கிறோம் என்று கூறினால் அதை நம்ப தமிழ் மக்கள் தயாராக இல்லை.

போதனா மொழியுரிமை என்ற கண்களைப்பறிக்க முயலும் சிங்கள ஆட்சிபீடம், இந்துப்பல்கலைக்கழகம் என்ற சித்திரத்தை வழங்க ஒருவேளை முன் வந்தால் கூட தமிழினம் அதில் ஏமாறப் போவதுமில்லை.

இனத்துக்காக உண்மையில்தியாகம் புரிவோர்யார்? மனப்பூர்வமாக பாடுபடுவோர் யார்? சுயநல வேட்டைக்காக சிங்கள ஆட்பீடத்திடம் சரணடைந்து இனத்தின் மானம் மரியாதைகளை விற்று வருவோர் யார் என்பதெல்லாம் தமிழ் மக்களுக்கு நன்குதெரிந்துவிட்டது. இனியும் தமிழ்காங்கிரசால் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாதென்பதை திரு. பொன்னம்பலம் உணரவேண்டும்.

## 'பறைத் தமிழ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

● நாம் தமிழர் இயக்கம், மலைநாட்டில் தோட்டங்களை வாங்கி அங்கு தமிழர்களுக்கு யுத்தப்பயிற்சி அளித்து வருகிறதாக பிரசாரம் செய்யப்படுகிறது.

● தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் இனவெறிப்பிரசாரங்களுக்கு ஏரிக்கரை முதலாளித்துவப் பத்திரிகைகளும், குணசேன, மற்றும் இடதுசாரி ஏடுகளும் அதிகப்படி முக்கியத்துவம் கொடுத்துவருகின்றன.

● இத்தகைய இனத்துவேஷப் பிரசாரத்தை திட்டமிட்டு பின்னாலிருந்து முடுக்கிவிட்டு வருவது ஆரிய சிங்கள சமாஜம் என்னும் புதியதொரு இரகசிய இயக்கம் என்று சொல்லப்படுகிறது. இந்த இயக்கம் பற்றி முதன் முதலில் சுதந்திரன் (16-5-69) ந் திகதிய இதழில் புட்டுக்காட்டியிருந்தது.

● கொழும்பிலும் ஏனைய பல சிங்கள கிராமங்களிலும் தமிழ் பெயர்கள் தார் பூசி அழிக்கப்படுகின்றன;

● 'சிங்களவர்களே ஒன்றுபட்டு பறைத் தமிழர்களை நாட்டை விட்டுத் துரத்துங்கள் என்பனபோன்ற கொலைகாரத்தனமான இனவெறிச் சுலோகங்கள் சிங்கள இடங்களில் காட்சி தருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தூற்றல் உலகமே' துள்ளாதே!

## கொட்டம் அடக்கு—இன்றேல் வாலை ஒட்ட நறுக்குவோம்!

தமிழன் தமிழனுடன் தமிழில் பேச வேண்டும், என்ற கோஷத்துடன், ஒவ்வொருமாதமும் பச்சோந்தி போல 'நிறத்தை'யும் மாற்றிக்கொண்டு, 'தமிழ் உலகம்' என்ற பெயருடன்—மற்றவர்களை நரகல் நடையில் தூற்றுவதையே தனது இலட்சியமாக கொண்டு ஈழத் தமிழகத்தின் ஓர் அவமானச் சின்னமாக வெளிவந்து கொண்டிருக்கும் ஏட்டின் ஆசிரியர், ஓர் 'ஆங்கிலோ தமிழராக' வாழ்ந்து வரும் 'பச்சை உண்மையை' சுதந்திரன் பல வாரங்களுக்கு முன் அம்பலப்படுத்தியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஆங்கிலத்தில் குளித்து மூழ்கி வாழ்வு நடத்திவரும் அதே நேரத்தில், தமிழன் தமிழனுடன் தமிழில் பேச வேண்டும் என்று கூச்சல் போடும் இவரது இரட்டை வேடத்தை சுதந்திரன் வாசகர்களுக்கு அன்று கிழித்துக் காட்டியிருந்தோம்.

சுதந்திரனில் வெளிவந்த இச் செய்தியால் அலமந்து வேர்த்து விறுத்துப்போன இவர், இச்செய்தி சுதந்திரனுக்கு எப்படிக்கிடைத்தது, இவர் கொடுத்திருப்பாரா அவர் கொடுத்திருப்பாரா என்று அறிவதில் அதிக அக்கறை காட்டித்திரிந்தாராம். இறுதியில், இப்போது தனது ஐந்தாந்தர ஏட்டில், சுதந்திரனின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதாக கூறிக்கொண்டு, தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகத்துடன் தம்மையும் ஒப்பிட்டுப்பார்த்தும்—தாம் விமானத்தில் திரு. செல்வநாயகத்துடன் ஒன்ருகப் பயணம் செய்த 'பழங்கதைகளை' கூறியும், சுதந்திரன் ஆசிரியரைக் 'கன்னு பின்னு' என்று திட்டியும் நமது குறியிலிருந்து தப்புவதற்கு சப்பைக்கட்டுக் கட்ட முயன்றிருக்கிருர். பரிதாபமாகத்தான் இருக்கிறது!

சுதந்திரனுக்கு எழுதப்பட்ட பதிலை தமிழ் உலகத்தின் ஆசிரியர் என்று வெளியுலகுக்கு 'உத்தியோக பூர்வமாக' தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் அதே நபர்தான் எழுதினரா? அல்லது அவரை ஆசிரியராக பெயருக்கு வைத்துக் கொண்டு பின்னலிருந்தபடியே தங்கள் தங்கள் சுயநலத்தை நிறைவேற்றியும் தமது பகைவர்களைச்சாடியும் வரும் 'வாலுமூலுக்கள்' எழுதினர்களா என்பது தெரியவில்லை.

'தமிழ் உலகத்தின் ஆசிரியர்' உத்தியோக பூர்வமாக என்று ஒருவர் அழைக்கப்பட்டாலும், முன்னுள் கம்யூனிஸ்ட் எழுத்தாளர் ஒருவரும் பத்திரிகை உலகுக்குள் தாம் காலடி எடுத்துவைக்க காரணமாக இருந்த தமிழரசு பா. உ. ஒருவரையே இன்று நன்றி கெட்டதனமாககேவலமாக திட்டிவரும் ஒரு கற்றுக்குட்டி பத்திரிகையாளருமே தமிழ் உலகத்துக்கு 'விஷயதானம்' செய்பவர்கள் என்பது பகிரங்க ரகசியம். இதே சமயத்தில், 'அலுவலகம்' என்பது தூய தமிழ்ச் சொல்லன்று; 'கந்தோரே' தமிழ்ச் சொல்லென வாதாடிய ஒரு 'மகா' வித்துவானும், 'இலங்கை மத்திய வங்கியென்ற தூய தமிழ்ச் சொல்லுக்காக தமிழ்த்தலைவர்கள் வாதாடி வந்த நேரத்தில் 'ஸ்ரீலங்கா மகாவங்கியே' சரியானது என்று கூறிய ஒரு 'வெங்காய' விரிவுரையாளருமே ஆலோசகர்களாக இருந்து 'புத்தி' சொல்லி வருகிருர்களாம். தேவை ஏற்படின் இவர்களது பெயர்களையும் சுதந்திரன் அம்பலப்படுத்த தயாராக இருக்கிறது.

சுதந்திரனுல் முச்சந்திக்கு இழுக்கப்பட்டு முகமூடிகிழிக்கப்பட்ட 'தமிழ் உலகம்' ஆசிரியர், தமிழரசுத் தலைவர்சா ஜே. வே. ஆங்கில உடை அணிவதாகவும், தாம் ''எட்டுமுழ வேட்டியை மடித்துக்'' கட்டுவதாகவும் என்னமோ உளறுகிருர். செல்வா காற்சட்டை அணிந்தாலும் அவரது உள்ளம் தமிழ் உள்ளம்; இது இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு நன்குதெரியும். ஆனல் இவரது உள்ளமோ 'வேட்டியைமடித்துக் கட்டினலும்' ஆங்கில உள்ளமாகவே காணப்படுகிறது என்பதை அவருடன் பழகியவர்கள் கூறுகிருர்கள்.

ஒருவனது செயலைப் பார்த்தே அவனை மதிப்பிட வேண்டுமே தவிர ஒருவனது தோற்றத்தையல்ல.

'கணை கொடிது யாழ்கோடு செவ்விதாங்கன்ன, வினைபடு பாலாற் கொளல்'

என்பது வள்ளுவர் வாக்கு

காற்சட்டையணிவது ஆங்கிலப் பண்பாடல்லவென்பதும், சங்ககாலத் தமிழர்கள் காற்சட்டை போன்ற ஓர் உடை அணிந்தனர் என்பதும் அதை 'மெய்ப்பை' என தமிழ் இலக்கியங்கள் செப்புவதும் தமிழ் உலகம் ஆசிரியருக்கு புரியாததில் வியப்பில்லை. புரிந்திருந்தால் காற்சட்டை ஆங்கில உடை என்று கூறியிருக்கமாட்டார்.

பிறந்த நாளுக்கு 'கேக்' வெட்டுவது தமிழர் பண்பாடல்ல. ஆனல் தமிழக முதல்வர் கலைஞர் கருணநிதி தமது பிறந்த நாளை 'கேக்' வெட்டி கொண்டாடியிருக்கிருர். இதனல் கலைஞர் கருணநிதிக்கு தமிழ்ப் பற்றில்லை என்று ஒருவன் கூறினல் அவன் இருக்க வேண்டிய இடம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியே. இதே போல செல்வா காற்சட்டை அணிந்தாலும் அவரது உள்ளம் 'தமிழுள்ளம்' தமிழில் தமது முதலெழுத்துக்களை போடும் தமிழ்த் தலைவர் செல்வாதான்; எஸ். ஜே. வி. என்பதை சா. ஜே. வே. என்று தமிழில் எழுதுபவர் செல்வா.

இலங்கையிலும் சரி, ஏன் தமிழ்நாட்டிலும்சரி, பலதலைவர்கள் தங்கள் பெயருக்கு முன்னல் இன்றும் கூட ஆங்கில எழுத்துக்களையே பயன்படுத்திவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

செல்வா இந்நாட்டுத் தமிழினத்துக்காக செய்த தொண்டில்—தியாகத்தில்—தூசி கூட செய்யாத செய்ய நினைக்காத இந்த அப்பாவி ஆசிரியருக்கு செல்வாவைப் பழிக்க என்ன யோக்கியதை உண்டு? தமது தொழிலுக்கு பழுதில்லாமல் பார்த்துக் கொண்டு அதே வேளையில்—தமிழ்த் தொண்டு செய்வது போல போக்குக் காட்டி ஒற்றுமையாக வாழும் தமிழ் மக்களை பிரதேச ரீதியில்பிரிவினை செய்யும் நோக்குடன் 'தமிழ் உலகம்' நடத்தும் கேடுகெட்ட பிரசாரத்தை தமிழினம் எங்ஙனம் பொறுக்க முடியும்?

மட்டக்களப்பார், யாழ்ப்பாணத்தார் என்று தமிழினத்தை கூறுபோட 'தமிழ் உலகம்' மூலமாக நடக்கும் இழிவான பிரசாரங்கள் அதன் அப்பாவி ஆசிரியருக்கு தெரியுமா? நாவலர் சிலை மட்டக்களப்புக்கு கொண்டு செல்லப்பட்டால் கறுப்புக்கொடி காட்டப்படும் என இந்த ஏடு பிரசாரம் செய்வதன் உள்நோக்கம் என்ன?

ஆறுமுகநாவலர் அன்று கூறிய கருத்துக்கள் பல இன்றுபொருந்தாதவையாக பின்பற்ற முடியாதவையாக இருக்கலாம். ஆனல் அதற்காக அன்றைய சூழ்நிலையில் நாவலர் ஆற்றிய பணிகளை மறந்து, என்றோ மறைந்த அப்பெரியவரை மட்டரகமாக திட்டுவதா தமிழ்ப்பண்பாடு? இந்த அப்பாவி ஆசிரியர் இதற்கு என்ன சொல்லப்போகிருர்?

இதே போலவே மொழியாலும் கலாசாரத்தாலும் ஒன்றுபட்டுள்ள தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையே மேலும் ஐக்கியத்தையும் நல்லுறவையும் வளர்க்கப் பாடுபட வேண்டிய நேரத்தில், இரு நாட்டுத் தமிழர்களுக்கிடையேயும் பேதத்தையும் பிளவையும் வளர்ப்பதற்கு 'தமிழ் உலகம்' பாடுபட்டு வருவதையும் தமிழ் மக்கள் அறிவார்கள்.

தாம் ''பாட்மின்ரன்'' என்ற ஆங்கில விளையாட்டு விளையாடுபவர் என்ற உண்மையை இவரால் மறுக்க முடியவில்லை.

இவர் ஆங்கிலத்தில் குளித்து முழுகி வாழ்வு நடத்துகிருர் என்பதற்கு மற்ருேர் உதாரணம் இவரது பத்திரிகையில் திருவள்ளுவர் ஆண்டோ தமிழ்த்திகதியோ, திங்களோ எதுவுமின்றி தனியே ஆங்கில திகதி மட்டும் இடம்பெறுவதாகும். இதையும் தமிழ் மக்கள் கவனத்துக்கு கொண்டு வருகிருேம்.

தாம் அரசாங்கத்திணைக்களங்களுடன் தமிழில் தொடர்பு கொண்டுவருவதாக கூறுகிருர். சுதந்திரன் சுட்டிக் காட்டியதன் பின்னர் இந்த மனமாற்றம் அவருக்கு ஏற்பட்டதற்காகப் பாராட்டுகிருேம்.

தமிழில் அரசாங்கத்துக்கு கடிதம் எழுதி தமிழில் பதில் பெறும் உரிமையை தமிழ் உலகம் ஆசிரியருட்பட இந்நாட்டுத் தமிழர்களுக்கு போராடிப் பெற்றுத்தந்தவர்— பிரித்தானிய வாழ்க்கையின் எச்ச சொச்சம் என்று எந்த சா. ஜே. வே. யைத் 'தமிழ் உலகம்'வர்ணித்ததோ அதே சா. ஜே. வே. தான் என்ற உண்மையை இவர் உணராவிட்டாலும், நாட்டு மக்கள் உணர்வர்.

சுதந்திரன் நிர்வாகம் அரசாங்கத்துடன் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்வதாக முழுப்பொய் ஒன்றை வெளியிட்டு ஆத்மதிருப்தியடைந்திருக்கிருர். உண்மையில் அரசாங்கத்திலிருந்து, தமிழில்லாது சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் மட்டும் வரும் ஒவ்வொரு கடிதத்தையும் சுதந்திரன் நிர்வாகம் திருப்பி அனுப்பி தமிழில் பெற்று வருகிறது. அப்பாவி ஆசிரியர் குறிப்பிட்ட அதே கணக்காளர்கூட சுதந்திரனில் பணியாற்றியபோது தம் கைப்பட பல ஆங்கில, சிங்களக்கடிதங்களை திருப்பி அனுப்பியிருக்கிருர் என்பதை அக்கணக்காளரே மறுக்க மாட்டார்.

இறுதியாக ஒரு விடயம்: தாம் பா. உ. பதவியை யாசிக்க விரும்பவில்லை; யாசிக்கப் போவதுமில்லையென்கிருர் அப்பாவி ஆசிரியர். வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட நாக்கைத்தொங்கப்போட்டபடி இவர் காத்திருந்ததும், அங்கு திரு. அமிர்தலிங்கத்துக்கு இருக்கும் அபரிமிதமான செல்வாக்கைக் கண்டு கதிகலங்கிப் போய், தாம் போட்டியிட்டால் 10 வாக்குகள் கூடக் கிடைக்காதென்பதை உணர்ந்து வெற்றிகரமாக இப்போது பின் வாங்கிவிட்டதும் ஊரறிந்த இரகசியம்.

தூற்றித் தூற்றி வாழ்ந்தவரில்லை. இதையே 'நரகல்

(8ம் பக்கம் பார்க்க)

---

## பொன்னரின் ஒற்றுமைக் குரலில் ...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

றையிருக்குமானல் ஏன் அதில் பங்கு பற்ருது ஒதுங்கிக் கொண்டார்? இவ்வாறு கேள்விகளைக் கிளப்பினல் அன்னரின் பழைய வரலாறு எமக்கு நல்ல விளக்கம் தரும்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது என்ற பிரச்சினை எழுந்ததும் தமிழரசார் அதையிட்டுப் போர்க் குரல் எழுப்பியதும் தெரிந்ததே. இப்போர்க் குரலைக் கண்டித்து உடுப்பிட்டிப் பா. உ, தமிழரசார் எல்லாவற்றையும்கெடுத்துப்போட்டார்கள் என்ற தங்கள் பழைய பல்லவியைப் பாடியது யாவரும் அறிந்ததாகும்.

### ஏன் போகவில்லை

பின்னர் போதன மொழி பற்றித் தமிழரசார் பிரதமரைச் சந்திக்கப் போவதை அறிந்ததும், முந்திவிழுந்து முதல் நாள் பிரதமரைச் சந்தித்தும தமிழரசை அழித்தால் தமிழினத்தையே அழித்து விடலாம் என்ற நப்பாசை கொண்டுள்ள முதலாளித்துவ பத்திரிகைகள்மூலம் அறிக்கைகள் வெளியிட்டும் திருப்தி அடைந்த கொன்னர் பின்னர் என்ன செய்தார்?

திரு. அமிர்தலிங்கம்' கல்விமான்களையும், பெரியர்களையும், சகல அரசியற்கட்சிகளையும் கொண்ட ஒரு மாநாடு கூட்டப் போகிருர் என்று அறிந்ததும் வேறு சில பெரியவர்களின் பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் ஒரு மாநாடு கூட்டி போதன மொழிப் பிரச்சினையை ஆராய வேண்டும் என்று ஒரு யோசனையைத் தெரிவித்தார். இத்துடன் அவர் போதன மொழிப் பிரச்சினையைத் 'தீர்த்து' வைத்தரார்.

இவர்களில் யாராவது திரு. அமிர்தலிங்கம் கூட்டிய மாநாட்டிற்குப் போனர்களா? தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகக் காரியதரிசி தமது அறிக்கையில் திரு. பொ. யாழ்ப்பாணத்தில் நிற்கமாட்டார்; ஆகையால் அவர் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார் ஆனல் திரு. மு. சிவசிதம்பரம் கலந்து கொள்வாரோ தெரியாது என்று கூறியிருந்தார்.

ஆனல் வேறுஒரு பத்திரிகையில் பாடசாலையை அரசாங்கம் எடுப்பதால் ஏற்படும் நிலைமையை அவதா[illegible] தெரிகிறது [illegible] இதில் எது பொய், எது மெய் என்பதை பக்கலே அறிவார்கள்.

இந்த மாநாடு எவ்வளவு முக்கியமானது என்பது யாவரும் அறிந்த விஷயம். இந்த மாநாட்டிற்கு ஏன் அவர்கள் போகவில்லை என்றால் தமிழினத்தின் 'மாபெரும் தலைவர்' ஒரு அமிர்தலிங்கம் கூட்டிய மாநாட்டிற்கு எப்படிப்போகமுடியும்?

தான் தான் தமிழ் மக்களின் தலைவர்; தான் தான் மூளைசாலி; தன்னைவிட மூளைசாலிகள் இல்லை; ஆகவே வட்டமேசை மாநாடு கூட்டி தன்னைப் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்பதே அன்னரின் ஒரே நோக்கமாகும் இது நிறைவேறுமா என்பதனைத் தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

பாடசாலைகள் பற்றியதிரு. அமிர்தலிங்கம் கூட்டிய மாநாட்டிற்குச் செல்லாதிருந்து விட்டு இன்று தேர்தல் காலக் காளான் பத்திரிகைகள் மூலம் அம்மாநாட்டை குறை கூறிக் கேலி செய்கிருர்கள். ஆனல் அவர்கள் ஒரு மாநாட்டைக் கூட்டி அதற்குத் தமிழரசாரையும் அழைத்தால் அவர்கள் போய்ப் பங்குபற்றுவார்கள் அப்படி ஒரு மாநாடு தமிழ் காங்கிரசார் கூட்டுவார்களோ தெரியாது. அப்படிக் கூட்டினலும் அங்கு எடுக்கப்படும் போர்க்குரலை ஏற்பார்களா? ஏற்கமாட்டார்கள். காரணம் போராட்டத்தைக் காணுதவர்கள்; போராடப் பலமில்லாதவர்கள்.

இவர்களது வட்ட மேசையும், ஒற்றுமைப் பல்லவியும் தமிழ் மக்கள் அறிந்த விஷயம். ஆகவே மீண்டும் தமிழினம் சுயநலக்கும்பலையும், இனத்துரோகிகளையும் பாராளுமன்றம் அனுப்பக் கூடாது.

—'மதியூகி'—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் எதிர்ப்பு- இந்தியதுரோகம்'

## தமிழ்ப்பட எதிர்ப்பு பற்றி 'இந்து' பத்திரிகை கருத்து

தென்னிந்தியத் தமிழ்ப்படங்களைத்தடை செய்யுமாறு இலங்கையில் நடத்தப்படும் பிரசாரத்தின் நோக்கம் தமிழர் எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு உணர்ச்சிகளைத் தூண்டி விடுவதுதான் என்று சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்துப்' பத்திரிகை அண்மையில் விமர்சித்துள்ளது.

அக்கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

பொதுத் தேர்தல் நெருங்கி வருவதால் கிளர்ச்சிக் காரர்களைத் திருப்திப்படுத்த அரசாங்கம் ஏதாவது செய்தாக வேண்டும் என்னும் நிலைமை தோன்றியருக்கிறது. கிளர்ச்சிக்காரர்களுடன் அரசாங்கத்தில் ஒரு அமைச்சராகவுள்ள டாக்டர் விஜயானந்த தகநாயக்காவும் சேர்ந்து கொண்டிருப்பது அரசாங்கத்தை இயற்கையாகவே கவலையடையச் செய்யும். பொறுப்பு வாய்ந்த ஒரு கபினெட் அரசாங்கத்தின் அடிப்படைத் தத்துவத்துக்கு முரணாக பல்வேறு வகையான அறிக்கைகளையும் டாக்டர் தகநாயகா வெளியிட்டு வருகிறார்.

பொறுப்பு வாய்ந்த அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒரு அமைச்சர், தனது சொந்தக் கருத்துக்களை மந்திரி சபையின் நான்கு சுவர்களுக்குள் மட்டுமேயன்றி வேறு எங்கும் வெளியிட முடியாது. அவர் அமைச்சரவையுடன் ஒத்துப் போக முடியாமற்போனாலும் அல்லது மந்திரி சபை அவருடன் ஒத்துப் போக முடியாமற் போனாலும, அமைச்சரவையிலிருந்து அவர் உடனடியாகவெளியேறி விடுவார்.

ஆனால் இலங்கையில் இப்படி நடப்பதாக இல்லை. பகிரங்க மேடையில் அமைச்சர் ஒருவர் ஒரு கருத்தை வெளியிடும் போது அக்கருத்தினை தனது ஏனைய சக அமைச்சர்களும் ஏற்றுக் கொள்வார்களா இல்லையா என்பதையாவது குறைந்த பட்சம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அரசாங்கத்தின் கருத்து என்ன என்பதைப்பற்றி அவர் கொஞ்சம் கூட கவலைப்படுவதாக இல்லை.

உதாரணமாக டாக்டர் தகநாயகா, கடந்த இரு ஆண்டுகளாக இந்தியாவுக்கு பிரயாணம் செய்வது தடைப்படுத்தப்பட வேண்டும் என்று கூறிவருகிறார். இந்தியாவுக்கு சேலை கடத்தும் நோக்குடன் செல்லும் பெண்களுக்கு தூக்குத் தண்டனையளிக்கப் பட வேண்டும் என்றும் அவர் தீவிரமாக சிபார்சு செய்துவருகிறார். பூரண மதுவிலக்கு மேடைகளில் அவர் கூறும் மற்றோர் திட்டம்.

இப்பொழுது, சிங்கள மக்களை 'இந்தியர்களாக' மாற்றுகிறது என்ற காரணத்தை முன்னிட்டு இந்தியப் படங்கள் முற்றாக தடுக்கப்பட வேண்டுமென்று பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். ஏனைய நாடுகளில் மந்திரி சபையின் கருத்திலிருந்து மிகவும் முரண்படும் இத்தகைய கருத்துக்களை கூறும் ஓர் அமைச்சர் எப்பொழுதோ அரசாங்கத்திலிருந்து வெளியேறியிருப்பார்.

இலங்கையில் அப்படி நடப்பது இல்லை தகாநயகாவின் இக்கருத்துக்களையிட்டு அமைச்சவை தீவிர கவனம் செலுத்தவுமில்லை.

டாக்டர் தகநாயகா, தாமாகவே அரசாங்கத்தை விட்டு வெளியேறவோ, அல்லது வெளியேற்றப்படவோ வேண்டிய ஒரு சூழ்நிலையை உண்டாக்கி வருவதாக லதந்தி அடிபடுகிறது. டாக்டர் தகநாயகா, யூ. என். பி. உறுப்பினராக இல்லாததால், அவரது தொகுதியாகிய காலியில் யூ. என். பி. அடுத்த 'தேர்தலின்' போது ஒரு வேட்பாளரை நிறுத்தவிருப்பதாகதெரிகிறது. லங்கா பிரஜா தந்திர கட்சியின் ஒரே உறுப்பினர்தான் டாக்டர் தகநாயகா.

சிறிமா தலைமையிலுள்ள இடதுசாரிகளுக்கு எதிராக, தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், பிலிப் குணவர்த்தன, கே. எம். பி. ராஜரத்தின ஆகியோர் டட்லி சேனநாயகாவுக்கு கைகொடுத்த சமயத்தில் அரசாங்கத்துள் நுழைந்தவர் டாக்டர் தகநாயகா. இப்பொழுது அவர் நீண்டகாலமாக உறுப்பினராக இருக்கும் தொகுதியில் யூ. என். பி. தனது வேட்பாளரை நிறுத்த ஆலோசிக்கும் சமயத்தில், திரு. தகநாயகா அரசாங்கத்திலிருந்து வெளியேற நினைப்பது இயற்கையே.

—இவ்வாறு அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

# பொன்னரின் ஒற்றுமைக் குரலில் தூய்மையிருந்தால் 'அமிர்' கூட்டிய மாநாட்டுக்கு ஏன் போகவில்லை?

மீண்டும் அதே ஓலம், அதே பல்லவி ஆரம்பமாகியுள்ளது. 1956 ம ஆண்டுத் தேர்தலில் எத்தனை பாராளுமன்ற கதிரைகள் எமக்கு. எத்தனை கதிரைகள் தமிழரசாருக்கு என்ற ஒரு பேரத்துடன் தனது நலனைக் கருத்திற்கொண்டு ஒற்றுமைக் குரல் எழுப்பிய திருவாளர் பொன்னம்பலம் மீண்டும் நடைபெற்ற தேர்தற் காலங்களிலெல்லாம் இடையிடையே அதே ஓலத்தை எழுப்பி ஓய்ந்து, இப்போது 1970 ம் ஆண்டுத் தேர்தல் வரவிருக்கும் சமயத்தில் ஒற்றுமை என்னும் தனதுபழைய பல்லவிைப் பாடுவதும், ஒற்றுமைக் குரல் எழுப்புவதும் ஏன்? இதிலேதான் அவரது அரசியல் மூளை சிறப்புப் பெற்றிருக்கிறது.

தேர்தல் வந்தால் மக்களிடம் போய் எதைக் கூறுவது? மக்கள் தேர்தலில் தன்னைத் தோற்கடித்து விட்டால் பின்னர் 1960 தொடக்கம் 1965 வரை அஞ்ஞாதவாசம் இருந்தது போல் எங்காவது இருக்கவேண்டி வந்து விடுமே என்பதுதான் அவருக்குப் பயம். அதனுல் ஒற்றுமை என்னும் சுயநலக் குரலை எழுப்பி பாராளுமன்றம் செல்வதே திரு. பொன்னம்பலத்தின் முக்கிய நோக்கமாகும்.

### பொன்னுன காலம்

ஒற்றுமை ஒற்றுமைஎன்று கூக்குரலிடும் திரு. பொவும், அவரது இரு சீடர்களும் பதில் சொல்ல வேண்டிய முக்கியமான ஒரு கேள்வி என்னவென்றால் 1960 முதல் 1965 வரை தமிழ் மக்கள் ஒற்றுமை இல்லாமலா இருந்தார்கள்? இந்தக் கேள்விக்கு விடைதெரிந்தால் அவர்கள் இக்குரலை எழுப்பமாட்டார்கள் அதே போன்று இந்தக் கேள்விக்கு விடைதெரிந்தால் யாழ்ப்பாணத் தொகுதி மக்கள். 1965 ம் ஆண்டு விட்ட பிழையை மீண்டும் விடமாட்டார்கள் என்பது எமது நம்பிக்கை.

# தமிழர் ஒற்றுமை ஏற்படுவதற்கு வழியென்ன?

ஆம், 1960 ம் ஆண்டு தேர்தல் முடிந்ததும் அரசியல் உலகிலே, அதுவும் தமிழ் பேசும் மக்களுடைய வாழ்விலே ஒரு பொன்னம்பலம் இல்லாத பொன்னுன காலம் எனலாம். அதற்கு யாழ் தொகுதி மககள் தெரிந்து எடுத்த பிரதிநிதியல்ல காரணம். அன்று யாழ் மக்கள் திரு. பொ. வை தோற்கடித்ததே காரணமாகும்.

தமிழரசுக் கட்சியினர் எடுக்கும் முடிவுகளை எதிர்த்துக் கொணடே ஒற்றுமைக் கீதம் பாடும் திரு. பொ. வைத் தோற்கடித்ததனுல் தமிழ் மக்கள் ஓரளவு ஒற்றுமைப பட்டாாகள்.

### ஒற்றுமை ஏற்பட்டது

தமிழரசுக் கட்சியுடன் அன்று திரு. மு. சிவசிதம்பரம், திரு. த. சிவசிதம்பரம் ஆகியோர் ஒத்துழைத்தார்கள். போராட்டங்களிற் கலந்து கொண்டார்கள். பாராளுமன்ற விவாதங்களில் எம்முடைய கருத்துக்களை ஏற்றுப் பேசினுர்கள், மாவட்ட சபை வேண்டும், தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டும் என்றெல்லாம் ஒரே குரல் தான் எங்கும் ஒலித்தது.

### சிவசிதம்பரம் கூறினுர்

அத்துடன் நில்லாது வட-கீழ் மாகாணங்களில் அரசாங்க அலுவலகங்களில் சிங்கள மொழி என்ற அரசாங்கக் கொள்கையை எதிர்த்து சிங்களமொழிச் சட்டம், ஒற்றையாட்சித் திட்டம் என்பனவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து கச்சேரி வாசலில் தீ வைத்த பின்னர் 1964 ம் ஆண்டு தை மாதம் 2ம் நாள் யாழ் நகர மண்டபத்தில் [illegible] சிவசிதம்பரம் [illegible] ஞர்?-

'1961 ம் ஆண்டு நடந்த எமதுரிமைப் போராட்டத்தின்பின், அவிழ்த்து விடப்பட்ட காட்டு மிராண்டித்தனத்தால் தமிழ் மக்கள் பயந்து விடுவார்கள்; இனி மேல் ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால், அதை இங்கு குழுமியுள்ள மக்கள் வெள்ளம் பொய்ப்பித்து விட்டதென்றும், தமிழ் மக்களை இவ்வாறு ஒற்றுமைப்படுத்த இந்தத் தலைவரை (மேடையிலிருந்த தந்தை செல்வாவைச் சுட்டிக் காட்டி) தவிர வேறு எவராலும் முடியாது'

இப்படிப் பலத்த கைதட்டல்களுக்கிடையே திரு. மு. சிவசிதம்பரம் அன்று கூறினுர்.

இவ்வாறு ஒற்றுமையுடன் இருந்த தமிழினம் ஏன் ஒற்றுமையை இழந்தது. உண்மையில் ஒற்றுமை 65 ம் ஆண்டுக்குப்பின் இல்லாமற் போனதற்கு ஒரே ஒரு காரணம் தான் உண்டு. திரு. பொ. மீண்டும் பாராளுமன்றத்திற்குவந்தார். ஒற்றுமை சிதறியது.

தமிழ் மக்கள் உண்மையில் நன்மையடைய வேண்டும், நாம் ஒற்றுமைப் படவேண்டும் என்ற எண்ணமிருந்தால் ஏன் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் கூட்டிய சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளின் போதனு மொழி பற்றிய சர்வகட்சி மாநாட்டிற்குப் போகவில்லை? அம்மாநாடு கூட்ட திரு. அமிர்தலிங்கத்திற்கு உரிமையில்லையா? உண்மையில், போதனு மொழி விஷயத்தில் திரு. பொ. வுக்கு, அக்க

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காட்சியளிக்கிறது

செல்லமகால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) ரீகல் (கம்பளை) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டுநகர்) 2வது வாரம் வின்சர் (யாழ்நகர்)



சிவாஜி, கே. ஆர். விஜயா, பத்மினி,
சௌகார் ஜானகி, நாகேஷ்

—நடித்த—

* * *



ஏ. பி. நாகராஜனின்

# திருமால் பெருமை

---

# 3வது வெற்றி வாரம்!



கிங்ஸ்லி (கொழும்பு) சப்பயர் (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை)
ஜுப்பிட்டர் (குருணகலை) வெம்பிளி (கண்டி)

ஜெயசங்கர், ஜெயலலிதா
நடிக்கும்

# பொம்மலாட்டம்

6 வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)

## அதே கண்கள்

ஈஸ்மன் கலர்

---



# 6வது மகத்தான வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஆனந்தா (கம்பளை)

ஜெய்சங்கர், டி. கே. பகவதி, எஸ். வரலட்சுமி
முத்துராமன், நாகேஷ், கிருஷ்ணகுமாரி,
ஓ. ஏ. கே. தேவர், நம்பியார், விஜயநிர்மலா
மற்றும் பலர் நடித்த,
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# உயிரா? மானமா?

கதை-வசனம்-டைரக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.
இசை: 'மெல்லிசை - மன்னன்' எம். எஸ். விஸ்வநாதன்.

---

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!!

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, நாகேஷ் நடித்த,
"அருள்பிரசாத் மூவிஸ்"

## எங்க ஊர் ராஜா

ஜெய்சங்கர், விஜயலட்சுமி, நாகேஷ் நடித்த
"பவித்ரா பிக்ஷர்ஸ்"

## அன்பு வழி

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ம் வருடம் மே மாதம் 14-ந் திகதி சனிக் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org